பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 16 புதன்கிழமை 01.09.2021 கதிர் 300

**இது ரகசியம் அல்ல!**

சிங்களத் தலைவர்களின் காலடியில் விழுந்து அதன் மூலம் அரசியல் வாழ்வை அமைத்துக் கொண்ட சுரேன் ராகவன் எம்.பி. தமிழ்த் தேசியக் கட்சிகளைப் பார்த்து விசனம் உரைப்பது வெட்கக் கேடானது.

யுத்தத்தின் இறுதிக் பக்கம்02

# அவசரகாலச் சட்டத்தின் கீழ் அடக்குமுறையே கட்டவிழும்

## எச்சரிக்கின்றது தமிழ்க் கூட்டமைப்பு ஜனாதிபதியின் முடிவுக்குக் கண்டனம்

கொழும்பு, செப்ரெம்பர் 01

நாடு முழுவதிலும் அவசரகாலச் சட்டத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பிரகடனப் படுத்தியிருக்கின்றமை தேவையற்ற ஒரு நடவடிக்கை. அதன் கீழ் அடக்குமுறை கட்டவிழும் பேராபத்து இருக்கின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எச்சரிக்கின்றது. ஜனாதிபதியின் அந்த முடிவைக் கூட்டமைப்பு கடுமையாக ஆட்சேபித்து கண்டனமும் தெரிவித்து இருக்கின்றது. 2

## யாழில் 24 மணித்தியாலங்களில் 375 தொற்றாளர்கள் அடையாளம்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று மாலை 4 மணி வரையான கடந்த 24 மணிநேரத்தில் 375 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

அவர்களில் 74 பேர் பி.சி.ஆர். பரிசோதனையிலும், 301பேர் அதிவிரைவு அன்டிஜன் பரிசோதனையிலும் கண்டறியப்பட்டுள்ளனர்.

சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 61 பேரும், கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 48 பேரும், யாழ்ப்பாணம் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 40 பேரும், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 38 பேரும், 10

## வவுனியாவில் தொற்று அதிகரிப்பு நேற்று 299 பேருக்குக் கொரோனா

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் மேலும் 299 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளின் முடிவுகள் சில நேற்றிரவு வெளியாகின. 10

## வவுனியாவில் மரணச் சடங்கில் பங்கேற்ற 28 பேருக்கு தொற்று

(வவுனியா நிருபர்)

மரண சடங்கில் கலந்து கொண்டிருந்த 28 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.

வவுனியா – ஒலுமடு பகுதியில், இம்மாதம் 24 ஆம் திகதி வவுனியா ஒலுமடு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள பட்டடைபிரிந்தகுளம் பகுதியில் மரணச்சடங்கு ஒன்று இடம்பெற்றது.

பின்னர் அவரது குடும்ப உறுப்பினர் இருவருக்கு சுகவீனம் ஏற்பட்டதையடுத்து புளியங்குளம் வைத்தியசாலைக்குச் சென்று அதிவிரைவு அன்டிஜன் பரிசோதனை மேற்கொண்டபோது இருவருக்கும் கொரோனா தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டது.

இதையடுத்து வவுனியா வடக்கு சுகாதாரப் பிரிவினரால் மரணசடங்கில் கலந்துகொண்ட 2

## மேலும் 100 ஆண்கள் உள்ளிட்ட 194 பேர் கொரோனாவால் சாவு

### 9 ஆயிரத்தைக் கடந்தது மொத்தக் காவு

இலங்கையில் மேலும் 194 பேர் கொரோனாத் தொற்றால் சாவடைந்துள் ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 9 ஆயிரத்து 185 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்தவர்களில் 94 பெண்களும், 100 ஆண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதில் ஆண்கள் இருவரும், பெண் ஒருவரும் என 03 பேர் 30 வயதுக்குட்பட்டவர்களாவர். 31 ஆண்கள், 14 பெண்கள் என 45 பேர் 30 - 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 146 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 67 ஆண்களும், 79 பெண்களும் அடங்குகின்றனர்.

## நாட்டில் நேற்று 4,221 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி

இலங்கையில் நேற்று 4 ஆயிரத்து 221 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 40 ஆயிரத்து 302 ஆக அதிகரித்துள்ளது என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 164 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 74 ஆயிரத்து 156 ஆக உயர்வடைந்துள்ளது.

### 100 வயது ஆண், 98 வயது பெண் உள்ளிட்ட

## மேலும் 5 பேரை குடாநாட்டில் பலியெடுத்தது கொரோனா!

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மேலும் ஐவர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த சங்கானையைச் சேர்ந்த 74 வயதுடைய ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட வரணியில் 98 வயதுடைய பெண் ஒருவர் வீட்டில் உயிழந்துள்ளார். அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை சுகாதார சுகாதார அதிகாரி பிரிவைச் சேர்ந்த கட்டுவனையைச் சேர்ந்த 81 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் கொரோனாத் 2

## வவுனியாவில் 4 பேர் மரணம்

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் கொரோனாத் தொற்று காரணமாக நேற்று 04 பேர் மரணமடைந்துள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் கொரோனாத் தொற்று தீவிரம் அடைந்துள்ள நிலையில் பலரும் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் 2

### கைதடி முதியோர் இல்லத்தில்

## 48 முதியவர்களில் 41 பேருக்கு தொற்று

யாழ்.சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் நேற்று முன்னெடுக்கப்பட்ட அதிவிரைவு அன்டிஜன் பரிசோதனையில் 69 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் 41 பேர் கைதடி அரச முதியோர் இல்லத்தில் பராமரிக்கப்படும் முதியவர்கள் 2

## வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள் விரட்டியடிப்பு

நாடு பூராகவும் கொரோனாத் தொற்று அதிகரித்துள்ள நிலையில் பயணத்தடை அமுல்படுத்தப்பட்டுள்ள வேளையில் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருநெல்வேலி சிவன் அம்மன் ஆலயத்துக்கு அருகாமையில் பயணத்தடையை மீறி மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள் கோப்பாய் பொலிஸாரால் விரட்டப்பட்டனர்.

அவ்விடத்தில் மரக்கறி வியாபாரிகள் ஒன்றுகூடி விற்பனையில் ஈடுபடுவதால் 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்டத்தில் செஞ்சிலுவைச் சர்வதேச குழு களத்தில் இல்லை. தாம் களத்தில் இருந்து வெளியேற முன்னர் புலிகளின் பிரதேசத்தில் இருந்து அரசுக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் சென்றவர்களின் பதிவுகளை அந்த அமைப்பு வைத்திருக்கின்றது. அப்படிப் போனவர்களில் பின்னர் காணாமல் போனவர்கள் என்று உறவினர்களினால் முறையிடப்பட்ட பதினாறாயிரம் பேரின் விவரங்களை அந்த அமைப்பு கையளித்துள்ளது.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இருபத்தி மூவாயிரம் பேருக்கு மேல் காணாமலாக்கப்பட்டிருக்கின்றனர் என்று தெரிவதாக, காணாமலாக்கப்பட்டோர் குறித்து ஆராய இலங்கை அரசினால் நியமிக்கப்பட்ட பரணகம ஆணைக் குழுவின் பரிந்துரை தெரிவிக்கின்றது.

கற்றுக் கொண்ட பாடங்கள், நல்லிணக்க ஆணைக்குழு கடைசி நேரத்தில் இராணுவத்திடம் சரணடைந்த அல்லது கையளிக்கப்பட்டவர்களில் மூவாயிரத்துக்கும் அதிகமானோரின் கதி தெரியவில்லை என்று கூறுகின்றது.

இப்படிப் பல பத்தாயிரம் பேர் காணாமலாக்கப்பட்ட அரச பயங்கரவாதத்தைப் பற்றிப் பேசுவதும், குரல் எழுப்புவதும், அந்த மக்களுக்குரிய நீதிக்காகப் போராடுவதும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் கடப்பாடு, பொறுப்பு, மறுக்க முடியாத பிரதான கடமை.

அதைத் தமிழ்க் கட்சிகள் செய்வதை விவஸ்தையின்றி நக்கலடிக்கின்றார் கலாநிதிப் பட்டத்தைத் தம் முன்னே பொறித்துக் கொண்டிருக்கும் சுரேன் ராகவன் எம்.பி. என்ற தமிழர். நல்ல வேடிக்கைதான் போங்கள்.

பல பத்தாயிரம் தமிழர்கள் வல்வந்தமாகக் காணாமலாக்கப்பட்ட விடயத்தை, சுரேன் ராகவன் எம்.பி. ஏற்றிப் போற்றிக் கும்பிடும் ராஜபக்ஷ அதிகார வர்க்கம் விசாரிக்காதாம். அதை மூடி மறைக்குமாம். உண்மைகளைக் கண்டறியதாம். பொறுப்புக் கூறலை நிலைநாட்டாதாம். நீதி செய்த மாட்டாதாம். அரச பயங்கவாதக் கொடூரத்தை ஒரேயடியாக மூடி மறைக்குமாம். அதைத் தமிழ்க் கட்சிகள் தட்டிக் கேட்கக் கூடாதாம். சர்வதேசத்துக்கு எடுத்துச் செல்லக் கூடாதாம். அது குறித்து ஆர்ப்பாட்டங்கள், எதிர்ப்பு நடவடிக்கைகள், போராட்டங்கள் நடத்தக் கூடாதாம். அப்படி நடத்தினால் அது காணாமலாக்கப்பட்டவர்கள் விடயத்தைக் சொச்சைப்படுத்தி தமிழ்க் கட்சிகள் அதில் செய்யும் பம்மாத்து அரசியலாம்.

கடந்த பொதுத் தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் நியமனம் கேட்டு சம்பந்தர், மாவை, சுமந்திரனைத் தேடிச் சென்று யாசகம் கேட்ட கலாநிதி இப்படி எல்லாம் உரைப்பது வேடிக்கையிலும் வேடிக்கை.

கடந்த பொதுத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் பத்து வேட்பாளர்கள் ஒவ்வொரு கட்சி, அணியிலும். நான்கு, ஐந்து ஆசனங்களை வெல்வோம் என எதிர்பார்த்த கூட்டமைப்புத் தலைவர்கள், பட்டியலில் பின்னால் தோற்பதற்கு ஐந்தாறு பலவீனமான வேட்பாளர்களைப் போட்டால் தங்கள் வெற்றி உறுதி என்ற மனக் கணக்கில் இருந்தார்கள் என்பதை அப்போதே குறிப்பிட்டிருந்தேன். வாசர்களுக்கு நினைவிருக்கலாம்.

தமக்கு வேட்பாளர் நியமனம் தருமாறு சம்பந்தரிடம்தான் முதலில் போனார் சுரேன் ராகவன். அவர் மெல்லக் கையை மாவை மற்றும் சுமந்திரன் பக்கம் காட்டி விட்டுத் தாம் ஒதுங்கிக் கொண்டார். எனினும் மாவைக்கும், சுமந்திரனுக்கும் அழைப்பு எடுத்து இப்படி ஆள் வருகின்றார் என்ற தகவலை எச்சரிக்கையாகச் சொல்லி வைக்க சம்பந்தன் தவறவில்லை.

அடுத்து மாவையிடம் போனார் அவர். மாவையும் வழமையான பாணியில் 'பார்ப்பம் தம்பி, செய்வம் தம்பி' என்ற மறுப்புக் கூறாமல் இழுத்தடித்தார். வேட்பாளர் பட்டியலில் பின்னால் தோற்பவர் அணிக்குள் அவரைச் சேர்த்துக்கொண்டால் என்ன என்ற எண்ணம் மாவையருக்கு.

இதற்கிடையில் சுமந்திரன் இணங்கவில்லை என்ற சாரப்பட மாவை பதிலளிக்க சுமந்திரனைத் தேடிச் சென்று சந்தித்தார் சுரேன் ராகவன்.

தன் வண்டவாளங்களை எல்லாம் பட்டியலிட்ட ராகவன், தனக்கு வேட்பாளர் பட்டியலில் இடமளிக்கும்படி வேண்டினார். நியமனக் குழுவிடம் பேசுவதாக சுமந்திரன் கூறினார்.

*"என்னவென்றாலும், நேரத்துடன் கூறுங்கள். நீங்கள் தராவிட்டால் எனக்கு வெற்றிலைக்கட்சி தேசியப் பட்டியலில் இடம் தருகின்றது என்கின்றது. அதிலாவது நான் சேர வேண்டும்."* – என்றார் சுரேன் ராகவன்.

*"அப்படி என்றால் நீங்கள் அங்கேயே பெற்றுக் கொள்ளுங்கள். இங்கு வராதீர்கள்!"* – என்று திட்டவட்டமாகக் கூறினார் சுமந்திரன்.

அத்தோடு தமக்குக் கூட்டமைப்பில் இடமில்லை என்று உறுதியாக வெற்றிலைப் பக்கம் எட்டிப்பிடித்தார் அவர்.

கூட்டமைப்பின் வேட்பாளர் நியமனக் குழுவின் கூட்டத்திலும் இதையெல்லாம் விவரித்தார் சுமந்திரன்.

சுரேன் ராகவனுக்கு இடம் கொடுத்தால் என்ன என்ற யோசனை – திட்டம் – மாவைக்கு இருந்தது உண்மைதான்.

ஆனால், வடக்கு மாகாண ஆளுநராக இருந்து கொண்டு சுரேன் ராகவன் செய்தவை பலவுண்டு. ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன நல்லாட்சி அரசுக்கு எதிராகத் திரும்பி, மஹிந்த ராஜபக்ஷவுடன் கூட்டமைத்து, அரசு நிறுவும் முயற்சி தோற்றுப் போன பின்னர், மைத்திரியின் ஆளாக – அரசுப் பிரதிநிதியாக சுரேன் ராகவன் ஜெனிவா மனித உரிமைகள் கவுன்ஸிலுக்குப் போய் தமிழர் தரப்புக்கு எதிராகச் செய்தவற்றை சுமந்திரன் பட்டியலிட்டதும்தான், மாவை தனது எண்ணத்தை அடியோடு மாற்றிக் கொண்டார் என நான் அப்போதே அறிந்திருந்தேன்.

நல்ல காலம், கூட்டமைப்பு அவருக்கு வேட்பு மனு கொடுக்கவில்லை. கூட்டமைப்பில் அவர் இருந்திருந்தால் தமிழ் மக்களின் மடியில் சூடாகக் கொதித்துக் கொண்டிருக்கும் காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினையை நீர்த்துப்போகச் செய்யும் கைங்கரியத்தைக் கனகச்சிதமாக மேற்கொண்டிருப்பார்.

அண்மையில் நாடாளுமன்றக் கன்ரீனில் சுமந்திரனையும், சித்தார்த்தனையும் சந்தித்த சுரேன் ராகவன், தனக்குக் கூட்டமைப்பு யாழ்.மாவட்டத்தில் இடம் தந்திருந்தால் கூட்டமைப்புக்கு நான்கு இடங்கள் யாழ்.மாவட்டத்தில் கிடைத்திருக்கும் என்றும், தான் நான்காவது எம்.பியாகத் தேர்வாகியிருப்பார் என்றுன் அடித்துக் கூறினாராம் சுரேன் ராகவன்.

இந்த ஆண்டின் செம ஜோக்தான் இது. சரி, அப்படி நடந்திருந்தால், பத்துப் பேர் வேட்பாளர் பட்டியலில் இப்போது ஆறாவதாக வந்த கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கு ஏழாவது இடம்தான் கிடைத்திருக்கும். நல்ல காலம் தப்பினார்.

தேவைப்படும் சமயங்களில் இப்படி பல உள்வீட்டுத் தகவல்களை வாசகர்கள் சுவைக்கு அவிழ்த்து விடுவேன். பார்த்திருங்கள்.

– மின்னல் –

## அவசரகாலச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான எம்.ஏ. சுமந்திரன் நேற்று மாலை தெரிவித்தவை வருமாறு:-

பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்தின் இரண்டாவது பகுதியை நடைமுறைக்கு கொண்டு வந்ததன் மூலம் திங்கட்கிழமை நள்ளிரவில் இருந்து நாடு முழுவதும் அவசரகால நிலையை பிரகடனப்படுத்தி இருக்கிறார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. இது ஒரு தேவையற்ற நடவடிக்கை. நாடு முழுவதிலும் அடக்குமுறைக்கு இது வழிப்படுத்தக் கூடும்.

நாட்டின் தேசியப் பாதுகாப்புக்கு ஆபத்து இருந்தால் அதோடு சம்பந்தப்பட்ட விவகாரங்களைக் கையாளத்தான் இந்த சட்டத்தின் கீழான அவசரகால நிலையைப் பாவிக்க முடியும். சுகாதார அவசரகால நிலைமையைக் கையாளும் சட்டம் அல்ல இது.

அதனால்தான் பொது மக்களின் பொது சுகாதார அவசரகால நிலைமைகளைக் கையாள்வதற்கான ஓர் அவசரகால சட்டம் இயற்றப்பட வேண்டும் என்று நாங்கள் தொடர்ச்சியாகச் சொல்லி வந்தோம். நாடாளுமன்றம் ஒரு வருடத்திற்கு மேல் செயற்பாட்டில் இருந்தும் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படாத நிலையில் அதற்கான ஒரு தனிநபர் சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் நானே பிரேரித்திருந்தேன். அதை எடுத்து நிறைவேற்றுவதாக அரசாங்கம் அண்மையில் தீர்மானித்திருந்தது.

ஆனால் இப்போது அவசரகாலச் சட்டத்தின் கீழ் பொதுசனப் பாதுகாப்பு விதிகளை நடைமுறைப்படுத்தி ஜனாதிபதி பிரகடனம் செய்திருக்கின்றார். நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டது என்ற தோரணையில் இப்பொழுது இதனைச் செய்திருக்கிறார்கள்.

இதன் ஆபத்து என்னவென்றால் இதைத் தொடர்ந்து முற்றுமுழுதாக ஜனாதிபதியின் ஆட்சியே நடக்கும். ஜனாதிபதி தாம் விரும்பிய சட்டங்களை – அவசரகால விதிமுறைகளை – வகுக்க முடியும். சட்டமாக்கும் அதிகாரமும் ஜனாதிபதியின் கைகளுக்குச் சென்றடையும்.

அத்தியாவசிய உணவுப் பொருள்களை சமூகத்திற்கு விநியோகிப்பதை உறுதிப்படுத்துவது என்ற ஏற்பாட்டில் இந்த அவசரகால சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டாலும், அத்தகைய விநியோகங்களில் இப்போது நெருக்கடி நிலை ஏதும் இல்லாதபோதும், அதன்பேரில் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு இருக்கின்றது.

அந்த அத்தியாவசிய சேவை விடயங்களையும் தாண்டி இந்த அவசரகாலச் சட்டம் மக்கள் மீது அடக்குமுறையாகப் பாயலாம் என்பதால் இதனை நாங்கள் வலுவாக கண்டிக்கிறோம். – என்றார்.

## வியாபாரத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவ்விடத்தில் பொதுமக்கள் ஒன்றுகூடி மரக்கறிகளைக் கொள்வனவு செய்யும் நிலைமை காணப்பட்டது.

அது தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து அவ்விடத்துக்கு விரைந்த கோப்பாய் பொலிஸார் வியாபாரத்தில் ஈடுபட்டவர்களை விரட்டினர்.

## வவுனியாவில் மரணச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நெருங்கிய உறவினர்கள் 30 பேருக்கு நேற்று அதிவிரைவு அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதில் 28 பேருக்குத் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சேர்க்கப்பட்டு வருகின்றனர். இந்நிலையில், கொரோனாத் தொற்று காரணமாக வவுனியா மாவட்டத்தின் குடியிருப்பு, தாண்டிக்குளம், தேக்கவத்தை, கோயில்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 99, 86, 39, 76 வயதுகளையுடைய நான்கு பேரே மரணமடைந்தவர்களாவர்.

குறித்த நான்கு பேரது சடலங்களையும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்வதற்குச் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## 48 முதியவர்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்று தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் நேற்று 98 பேரிடம் அதிவிரைவு அன்டிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. அவர்களில் 28 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டது.

இவ்வாறு நேற்று அடையாளம் காணப்பட்ட 28 பேரையும் அவர்களது உடல் நிலையைக் கணித்து ஒரு பகுதியினரை வீடுகளில் பராமரிக்கவும், மற்றொரு பகுதியினரை கொரோனா இடைத்தங்கல் சிகிச்சை நிலையங்களில் கண்காணிக்கவும் எனப் பரிந்துரைக்கப்பட்டனர்.

கைதடி அரச முதியோர் இல்லத்தில் பராமரிக்கப்படும் 48 முதியவர்களுக்கு அதிவிரைவு அன்டிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. அவர்களில் 41 பேருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. அதேவேளை, அங்கு கடமையாற்றும் 12 ஊழியர்களுக்கும் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. தொற்றாளர்கள் அனைவரையும் வட்டுக்கோட்டை மற்றும் கோப்பாய் இடைத்தங்கல் சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பப் பரிந்துரைக்கப்பட்டது.

## மேலும் 5 பேரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 100 வயதுடைய ஆண் ஒருவர் வீட்டில் உயிரிழந்த நிலையில் சடலம் மந்திகை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் கொரோனாத் தொற்றுள்ளமை கண்டறிப்பட்டது.

அல்வாய் மேற்கு திக்கத்தைச் சேர்ந்த 47 வயதுடைய பெண் ஒருவர் வீட்டில் உயிரிழந்த நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் கொரோனாத் தொற்றுள்ளது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 248 ஆக உயர்வடைந்துள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir

# வடக்கினுள் போதைப்பொருள் அரச தரப்பின் ஆதரவுடனா?

## கேள்வி எழுப்புகிறார் சட்டத்தரணி சுகாஷ்

தமிழர் தாயகத்தைச் சிதைத்து எதிர்கால சந்ததியினுடைய விடுதலை உணர்வைச் சிதைப்பதற்காக, தமிழ் மக்களினுடைய எதிர்கால சந்ததியை அழிப்பதற்காக, தமிழர் தாயகத்தை இலக்கு வைத்து அரசினுடைய மறைமுக அல்லது நேரடி ஆதரவோடு, போதைப்பொருள்கள் குவிக்கப்படுகின்றனவா? என்ற சந்தேகம் ஏற்படுகிறது எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகரும், வழக்கறிஞருமான கனகரத்தினம் சுகாஷ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளது. அதிக போதைப் பொருள் தமிழர் பகுதிகளை இலக்கு வைத்து இலங்கை கடற்படையின் பாதுகாப்பை மீறி எவ்வாறு கடத்தி வரப்படுகின்றன? இதன் பின்னணி என்னவாக இருக்கும்? என்பது தொடர்பாக வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

உண்மையில் இது ஆழமாக ஆராயப்பட வேண்டியதொரு விடயம். ஏனென்றால், இலங்கை அரசினுடைய கடற்படை, கடந்த காலத்தில் மிக மிக வலுவாக, இறுக்கமாகச் செயற்பட்டதாகக் கூறப்பட்டது.

விடுதலைப் புலிகளினுடைய கடற் போக்குவரத்தையும், அவர்கள் கடலினூடாக ஆயுதங்களைக் கொண்டு வந்ததையும், இலங்கை கடற்படை முறியடித்ததாக இலங்கை அரசு பெருமையோடு பீத்தி வந்தது.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கொண்டு வருவதை இலங்கை கடற்படை முறியடித்தமை உண்மை என்றால், ஆயுதம் ஏந்தாத நபர்கள் போதைப் பொருள்களை இலங்கைக்குள் கடத்துவதை இலங்கை கடற்படையால் இலகுவாக முறியடிக்க முடியும். ஆனால் அதையும் தாண்டி போதைப்பொருள்கள் கடத்தப்பட்டு இலகுவாகக் கொண்டு வரப்படுகின்றது என்றால், இங்கே சில கேள்விகள் எங்களுக்கு எழுகின்றன.

முதலாவது, போதைப் பொருள் கடத்தல்காரர்கள் இலங்கை கடற்படையின் பாதுகாப்பை முறியடித்துக் கடத்துகிறார்களா? இரண்டாவது, இலங்கை கடற்படை தனது கடற்பரப்பைப் பாதுகாக்கின்ற திறனை இழந்து விட்டதா? மூன்றாவது, இலங்கை கடற்படையின் மறைமுக அனுமதியோடு தான், போதைப்பொருள்கள், தமிழர் தாயகப் பிரதேசத்துக்குள் கடத்தப்படுகின்றனவா? என்பது போன்ற கேள்விகள் இங்கே எழுகின்றன.

அதுவும், பல கடத்தல் சம்பவங்களின் போது, மூடை மூடையாக, போதைப்பொருள்கள் மீட்கப்படுகின்றன. ஆனால், சந்தேக நபர்கள் யாருமே கைது செய்யப்படவில்லை என்று கூறுகிறார்கள். எங்களுக்கு எழுகின்ற கேள்வி, அப்படியானால், அந்த போதைப்பொருள்கள் படகிலே, தாங்களாகவே படகை வலித்து வருகின்றனவா?

கடலுக்குள் போதைப்பொருள்களைக் கடத்தி வருகின்ற நபர்கள், எவ்வாறு? அவ்வளவு இலகுவாக மறைகிறார்கள் என்பதெல்லாம் விடை தெரியாத கேள்விகளாகவே இருக்கின்றன.

இதனால்தான், நாங்கள் நியாயமாகச் சந்தேகப்படுகின்றோம். தமிழர் தாயகத்தைச் சிதைத்து எதிர்கால சந்ததியினுடைய விடுதலை உணர்வைத் தமிழ்த் தேசம் பற்றிய உணர்வுகளைச் சிதைப்பதற்காக, தமிழ் மக்களினுடைய எதிர்கால சந்ததியை அழிப்பதற்காகத் தமிழர் தாயகத்தை இலக்கு வைத்து அரசினுடைய மறைமுக அல்லது நேரடி ஆதரவோடு, போதைப்பொருள்கள் வடக்குக்குள், கிழக்குக்குள் குவிக்கப்படுகின்றனவா? என்ற நியாயமான சந்தேகமும் ஏற்படுகிறது.

இவற்றை நாங்கள் நிவர்த்தி செய்ய வேண்டுமாக இருந்தால், இலங்கையினுடைய கடற்படையினுடைய வலு பற்றி நாங்கள் ஆராய வேண்டிய தேவை இருக்கின்றது.

ஆனால், இலங்கையினுடைய கடற்படை வலுவாக இருப்பதாகவே, இலங்கையினுடைய கடற்படை அதிகாரிகள் கூறுகிறார்கள். அப்படிப்பட்ட கடற்படை ஏன் போதைப்பொருள் கடத்தலைத் தடுக்கவில்லை அல்லது தடுக்க முடியாமல் இருக்கிறது என்பன எல்லாம் விடை தெரியாத கேள்விகளாகவே உள்ளன. ஆனால் என்னுடைய மேற்கூறிய பதிலுக்குள் அந்த விடை தெளிவாக உங்களுக்குப் புரியும் என்று நம்புகிறேன் எனத் தெரிவித்துள்ளார்.




# திடீர் சோதனை நடவடிக்கையில் மட்டக்களப்பு பொலிஸார் மும்முரம்

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் அதனை மீறுவோரை கண்டறியும் வகையிலான தொடர்ச்சியான சோதனை நடவடிக்கைகள் நேற்றும் (செவ்வாய்க்கிழமை) முன்னெடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தில், பொதுமக்களின் பொறுப்பற்ற செயற்பாடுகள் காரணமாக கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதில் சுகாதாரத் துறையினர் பல சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆகவேதான், தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறி செயற்படுவோரை கண்டறியும் வகையிலான நடவடிக்கைகளை, மட்டக்களப்பு பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

அந்தவகையில் நேற்றும், மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட புறநகர்ப்பகுதிகளில் பொலிஸாரும் மட்டக்களப்பு மாநகரசபை ஊழியர்களும் இணைந்து விசேட சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

இருதயபுரம், கூழாவடி, புன்னைச்சோலை, மாமாங்கம், பாலமீன்மடு ஆகிய பகுதிகளில் இந்த விசேட சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறி திறக்கப்பட்டிருந்த வர்த்தக நிலையங்கள் பொலிஸாரால் மூடப்பட்டமையுடன், தேவையற்ற வகையில் நடமாடியவர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டு, திருப்பியனுப்பிவைக்கப்பட்டனர்.

அத்துடன், தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி பயணம் செய்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# உலருணவுப் பொதிகளை வழங்க நிதி கிடைக்காமையால் நெருக்கடி

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது அதிகரித்துள்ள கொவிட் தொற்றாளர்கள் காரணமாக அதிகளவான குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு அரசால் உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆனால் கிளிநொச்சி மாவட்டத்தில் அவற்றைத் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு வழங்குவதில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாக மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் கூட்டுறவுச் சங்கங்கள் மேலும் தெரிவிக்கையில்

அதிகரித்துள்ள தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு உலருணவுப் பொருள்களைத் தொடர்ச்சியாக வழங்குவதற்கு எமக்கு நிதி கிடைக்கவில்லை. ஆனால் உலருணவுப் பொருள்களை வழங்குவதற்கான பட்டியல்கள் மாத்திரம் கிடைக்கப்பெற்று வருகின்றன.

மேலும் பொருள்களை வழங்குவதற்கான கூறுவிலை கோரல் எம்மிடம் பெறப்பட்ட போது காணப்பட்ட பொருள்களின் விலைகளில் தற்போது இல்லை அனைத்து பொருள்களின் விலைகளும் அதிகரித்து விட்டன.

இந்த நிலையில் நாம் தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு உலருணவுப்பொருள்களை வழங்குவதில் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றோம் எனக் கூட்டுறவுச் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

எனவே இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் றூபவதி கேதீஸ்வரனை தொடர்பு கொண்டு வினவிய போது தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கான உலருணவுப் பொருள்களை வழங்குவதற்கான நிதியை நாம் திறைசேரியிடம் கோரியுள்ளோம். எனவே, நிதி கிடைத்ததும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

# புலம்பெயர்ந்த மக்களுக்கு செயல்வடிவம் கொடுக்க வேண்டியது அரசின் பொறுப்பு!

## துரைரெட்ணம் தெரிவிப்பு

யுத்தகாலத்தில் புலம்பெயர்ந்து சென்ற மக்களுக்கு செயல்வடிவம் கொடுக்க வேண்டியது இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பாகும் என ஈ.பி. ஆர்.எல். எஃப் பத்மநாபா மன்றத்தின் தலைவரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான இராதுரைரெட்ணம் தெரிவித்துள்ளார்.




நேற்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் இரா.துரைரெட்ணம் மேலும் கூறியுள்ளவை வருமாறு–

நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தால் இடம்பெயர்ந்த தமிழ் அகதிகள் தொடர்பில் இந்தியாவின் செயற்பாட்டுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அவர்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை தமிழ்நாட்டு அரசு தமிழர்களுக்கு வழங்கிய ஒரு நல்ல செய்தியாகும்.

இதேவேளை புலம்பெயர்ந்த மக்களுக்கு செயல்வடிவம் கொடுக்கவேண்டியது இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

புலம்பெயர்ந்துள்ள மக்கள் தொடர்பாக அதாவது, அவர்களுக்காக நல்ல திட்டங்களை அமுலாக்கி அவர்களை மீண்டும் நாட்டுக்கு வரவழைக்கின்ற செயற்பாடுகளை இலங்கை அரசு முன்னெடுக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

# பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு தியாகி அறக்கொடையால் உதவு தொகை

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரின் ஏற்பாட்டில் தியாகி அறக்கொடை நிறுவனத்தின் இயக்குநர் தியாகேந்திரனால் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்பநல உத்தியோகத்தர்களுக்கு உதவு தொகை வழங்கி வைக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் கொத்துவக்குவின் வழிகாட்டுதலின் கீழ், தற்போதைய கொரோனா இடர் காலத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் சேவையாற்றி வரும் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்ப நல உத்தியோகத்தர்களை கௌரவிக்கும் முகமாக தியாகி அறக்கொடை நிதியத்தின் இயக்குநர் வாமதேவன் தியாகேந்திரனின் நிதி பங்களிப்பில் குறித்த உதவு தொகை வழங்கி வைக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடமையாற்றும் 84 பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், 276 குடும்பநல உத்தியோகத்தர்களுக்கு இந்த உதவித் தொகை நேற்று (செவ்வாய்க்கிழமை) வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி, தியாகி அறக்கொடை நிதியத்தின் இயக்குநர் ஆகியோர் கலந்து கொண்டு உதவித் தொகையை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நீதி மறுக்கும் நீதி அமைச்சர்

**யுத்தத்தின் பெயரால் பல்லாயிரம் தமிழர்களைத் தன் படைகள் மூலம் பலவந்தமாகக் காணாமலாக்கி, கொன்றொழித்த பௌத்த, சிங்களப் பேரினவாத அரசு அது விடயத்தில் தன் உண்மை முகத்தை அம்பலப்படுத்தி விட்டது.**

**சிறுபான்மை இனமான முஸ்லிம் தரப்பின் பிரதிநிதி ஒருவர், பௌத்த, சிங்களப் பேரினவாத அரசின் நீதி அமைச்சராக இருந்து கொண்டு இது விடயத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அநீதி உரைத்தமைதான் வரலாற்றுத் துன்பியல் பதிவாகும்; பழியுமாகும்.**

**பல பத்தாயிரம் பேர் வன்னிப் பெரு நிலப்பரப்பில் இப்படி பலவந்தமாகக் காணாமலாக்கப்பட்டு கொன்றொழிக்கப்பட்டனர் என்பதை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் அறிக்கைகள், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, காணாமல்போனோர் பற்றிக் கண்டறிய நியமிக்கப்பட்ட பரணகம ஆணைக்குழு போன்றவற்றின் பரிந்துரைகள் ஆதாரபூர்வமாக உறுதிப்படுத்தியுள்ளன.**

**ஆரம்பத்தில் இந்த யுத்தம் ஒரு சிவிலியனின் இழப்புக் கூட இல்லாமல் – பொதுமகனின் ஒரு சொட்டு இரத்தம் கூட சிந்தப்படாமல் – முடிக்கப்பட்டதாகக் கதை விட்ட சிங்கள அரசு, ஆள்கள் காணாமல்போகவேயில்லை என்று முதலில் அடியோடு மறுத்துப் பார்த்தது. முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கும் அந்த முயற்சி அடிபட்டுப் போகவே இப்போது வேறு கதை விடுகின்றது பெருங்குற்றம் இழைத்துள்ள பௌத்த, சிங்களக் கொடூர அரசு.**

**உண்மை சுடும். பௌத்த, சிங்களப் பேரினவாத அரசின் மிருகத்தனமான உண்மை முகத்தை அது அம்பலப்படுத்தும். பயங்கரவாதத்தை ஒழிக்கும் பெயரால் அரசு புரிந்தது மிக மோசமான – மனித குலத்துக்கே பொருந்தாத – மிகக்குரூரமான – அரச பயங்கரவாதத்தை ருசுப்படுத்தும். அதனால் தான் அதனை அடியோடு மறைக்க எத்தனிக்கின்றது சிங்கள அரசு. அதற்குத் துணை போகின்றார் இஸ்லாமியரான நீதி அமைச்சர்.**

**காணாமலாக்கப்பட்ட ஒவ்வொருவரும் இலங்கையராம். அவர்கள் காணாமலாக்கப்பட்டமையால் அவர்களின் உறவுகளுக்கு ஏற்பட்ட வலியைத் தாங்களும் உணர்கின்றார்களாம். அதனால் அவர்களுக்கு இழப்பீடுகளைப் பெற்றுத் தருகின்றார்களாம்.**

**ஆனால் ஆள்கள் எப்படிக் காணாமலாக்கப்பட்டார்கள் என்று ஆராயமாட்டார்களாம். அதில் குற்றம் ஏதும் இழைக்கப்பட்டதா என்பதைக் கண்டறிய மாட்டார்களாம். அதாவது அந்நபர்கள் எப்படிக் காணாமலாக்கப்பட்டார்கள் என்ற உண்மையைக் கண்டறியவோ உண்மையை வெளிப்படுத்தவோ முயல மாட்டார்களாம்.**

**ஆனால் அந்த உறவுகளின் வலியை அறிவார்களாம். மீள நிகழாமையை உறுதிப்படுத்துகின்றார்களாம்.**

**யார் காதில் பூச்சுத்துகின்றார் நீதி அமைச்சர்? காணாமலாக்கப்பட்ட தமது உறவுகள் தொடர்பான உண்மைகளைக் கண்டறியாமல் அவர்களின் வலி நீங்கும் என்று யாருக்குக் கணக்கு விடுகின்றார் அலி சப்ரி? குற்றம் இழைக்கப்பட்டதா என்பதைத் தேடவே மாட்டோம் என்றால் அதன் அர்த்தம் என்ன? அந்தக் கொடூரத்தை இழைத்தவர்கள் தண்டிக்கப்படவே மாட்டார்கள், பொறுப்புக் கூறல் நிலைநிறுத்தப்பட்வே மாட்டாது, குறைந்த பட்சம் அவர்கள் அம்பலப்படுத்தப்பட்டு பொது மன்னிப்புக் கூடக் கோர வேண்டிய தேவையில்லை. அதாவது தண்டனை விலக்களிப்பு முழு அளவில் நடைமுறைப்படுத்தப்படும் என்பதுதான் அதன் அர்த்தம். பல பத்தாயிரம் பேரை வலிந்து காணாமலாக்கியோருக்கு முழு அளவில் தண்டனை விலக்களிப்பதை உறுதிப்படுத்துவதன் மூலம் மீள நிகழாமையை உறுதிப்படுத்தலாம் என்று கதை விடும் புதிய நியாயத்தை நீதி அமைச்சர் என்ற நாமம் தாங்கியவர் உரைக்கின்றார். இதுதானா இவர் படித்த நீதி முறைமை?**

**கோட்டா அரசின் கொடூரத்துக்குத் தவறான அர்த்தப் படுத்தல்கள் வழங்குவதன் மூலம் நீதி அமைச்சர் அலி சப்ரி வரலாற்றுத் தவறையும், மனித நாகரிகப் பண்பியல்புகளுக்கு மாறாக வரலாற்றுத் துரோகத்தையும் இழைக்கின்றார்.**

**எந்தக் குர் ஆனிலும், எந்த வேதாகமத்திலும், எந்த பகவத் கீதையிலும், எந்த தம்ம பதத்திலும் நியாயப்படுத்த முடியாத அராஜகம் இது.**

# தரமான தடுப்பூசிகளை மக்களுக்கு வழங்குக!

## ராஜித வலியுறுத்து



இந்த நாட்டு மக்களுக்கு தரமான கொவிட் தடுப்பூசிகளை அரசாங்கம் வழங்க வேண்டுமென முன்னாள் சுகாதார அமைச்சரும், எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினருமான வைத்தியர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில் -

சினோபோர்ம் தடுப்பூசி பெற்றுக்கொண்டவர்களில் 112 பேர் இதுவரையில் மரணித்துள்ளனர், பைஸர் தடுப்பூசியை ஏற்றிக் கொண்டவர்களில் 3 பேர் உயிரிழந்துள்ளனர், அஸ்ட்ரா ஜெனெகா தடுப்பூசி ஏற்றிக் கொண்டவர்களில் ஒருவர் இதுவரையில் உயிரிழந்துள்ளார்.

சினோபோர்ம் தடுப்பூசிகளை விடவும் வேறு தடுப்பூசி கொண்டு வருமாறு நாம் கூறிய போது எம்மை பல்வேறு வழிகளிலும் விமர்சனம் செய்தனர். நாம் இந்தத் தடுப்பூசி ஏற்றுகையை குழப்புகிறோம் என குற்றம் சுமத்தினர்.

எனினும், இந்த நாட்டு மக்களுக்கு தரமான தடுப்பூசிகளை வழங்குமாறு நாம் கோருகின்றோம். முடக்க நிலை தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனம் செய்துள்ள பரிந்துரையை அரசாங்கம் பின்பற்ற வேண்டும்.

பொருளாதாரக் காரணிகளைக் கருத்திற்கொண்டு உயிர்களை பலிகொடுக்க முடியாது. இந்த நாட்டின் மருந்துப் பொருள்கள் தொடர்பான அமைச்சருக்கு நாட்டில் எந்த மருந்துக்கு தட்டுப்பாடு என்பது தெரியவில்லை.

எனினும் எதிர்க்கட்சித் தலைவருக்கு அந்த விடயங்கள் நன்றாகத் தெரிந்திருக்கின்றன என வைத்தியர் ராஜித சேனாரட்ன குறிப்பிட்டுள்ளார்.

# தமிழக முதல்வர் ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்தார் யாழ்.மேயர்

தமிழகம் வாழ் இலங்கைத்தமிழர்கள்நலன் தொடர்பில் தீர்மானங்கள் எடுத்துள்ள தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு யாழ்ப்பாணம் மாநகர மேயர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் நன்றி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் ஆரம்பித்ததில் இருந்து இந்தியாவின் தமிழகத்துக்கு கணிசமான இலங்கைத் தமிழர்கள் புலம்பெயர்ந்து தஞ்சம் கோரி ஏதிலிகளாக வாழ்ந்து வருகின்றனர்.

தமிழ்நாடு அரசின் தரவுகளின்படி 108 முகாம்களிலும் மற்றும் முகாம்களுக்கு வெளியிலுமாக 92 ஆயிரத்து 978 இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழகத்தில் வாழ்கின்றனர். இதுவரை காலமும் இலங்கைத் தமிழர்களில் பலர் அங்கு இரண்டாம் தர மக்களாக அடிப்படை வசதிகள் கூட இல்லாமல் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் தமிழக முதல்வராக பதவியேற்ற மு.க.ஸ்டாலின் தன்னுடைய முதலாவது வரவு - செலவுத் திட்டத்திலேயே இலங்கைத் தமிழ் அகதிகளின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் வகையில் வேலைவாய்ப்புகள், கல்விக்கான உதவித்தொகைகள், மானியங்கள், வீடமைப்பு போன்ற பல திட்டங்களை முன்மொழிந்து அதற்கான நிதியையும் ஒதுக்கி வைத்திருக்கின்றமை ஈழத்தமிழர்களுக்கு மட்டுமல்ல உலகத் தமிழர்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் தந்திருக்கின்றது.

தமிழகம் வாழ் இலங்கைத் தமிழர்கள் தொடர்பான தமிழக முதல்வரின் தீர்மானங்களுக்கு எனது நன்றிகளை ஈழத்தமிழர்கள் சார்பில் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

ஒரு தமிழக முதல்வராக தமிழகத்தில் வாழ்கின்ற எங்களுடைய உறவுகளுக்கு உதவிக்கரம் நீட்டி அவர்களுக்கென்றொரு அங்கீகாரத்தை வழங்கியமை போல் எங்களுடைய நீண்டகால அரசியல் அபிலாஷைகளை அடைவதற்கும் தமிழகத்தில் வாழ்கின்ற எமது உறவுகள் தமது தாய் நிலம் திரும்பி அவர்களது தாய்மண்ணில் மகிழ்ச்சியாக வாழக்கூடிய வகையில் எமக்கான அங்கீகாரத்தை உலகப்பந்தில் பெற்றுத்தருவதற்கும் தாங்கள் செயலாற்ற வேண்டும்.

தமிழகத்தை இந்தியாவின் முன்னிலையான மாநிலமாக மாற்றும் வகையில் முதல்வர் செயற்படுகின்ற விதம் எமக்கு மகிழ்ச்சியை அளிப்பதோடு அப் பயணத்தில் வெற்றி பெற எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன். - என்றுள்ளது.

# அரசாங்கம் கடும் நிதி நெருக்கடியில் செலவினங்களைக் கட்டுப்படுத்த முடிவு

அரசாங்கம் எதிர்கொள்ளும் கடுமையான நிதி நெருக்கடியின் மத்தியில் செலவினங்களைக் கடுமையாகக் கட்டுப்படுத்த முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொவிட் தொற்றுநோயால் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் அரசாங்கத்தால் எதிர்பார்க்கப்படும் வருவாய் கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளதாகவும், இந்த ஆண்டு செலவுகளை ஈடுசெய்ய இது போதுமானதாக இருக்காது என்றும் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அமைச்சரவையில் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், அரசு நிதி ஒதுக்கப்பட்ட போதிலும், இதுவரை ஆரம்பிக்கப்படாத திட்டங்கள், கொள்முதல், கட்டடங்கள் கட்டுதல், கட்டடங்களைச் சீரமைத்தல் போன்றவற்றை நிறுத்தி வைக்குமாறு நிதி அமைச்சகம் அமைச்சக செயலாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இதுவரை நியமனக் கடிதங்கள் வழங்கப்படாத பணியிடங்களுக்கான ஆள்சேர்ப்பை நிறுத்தவும் அரசு முடிவு செய்துள்ளது.

நலன்புரி நடவடிக்கைகளுக்காக அடையாளம் காணப்பட்ட பயனாளிகளின் பட்டியலை மறுபரிசீலனை செய்யவும் மற்றும் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு மட்டுமே மானியத்தை கட்டுப்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையில், அமைச்சகத்தின் செயலாளர்கள் மற்றும் துறைகளின் தலைவர்களின் ஒப்புதலுடன், நிதி அமைச்சகம் சம்பளமில்லாத கொடுப்பனவுகள் மற்றும் செலுத்தப்பட்ட பில் தீர்வுகளை மதிப்பாய்வு செய்து உண்மையிலேயே சேவையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளுக்கு மட்டுமே வழங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அமைச்சகங்களின் செயலாளர்கள் தங்கள் நிறுவனங்களின் அலுவலர்களுக்கு செலுத்தப்படும் எரிபொருள் கொடுப்பனவுகளை வட்டார அடிப்படையில் வந்து சேரும் திகதியில் மட்டுமே செலுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பாகவும் முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிலையில், செலவினங்களைக் கட்டுப்படுத்துவதன் மூலம் சேமிக்கப்படும் நிதியின் அளவு குறித்த விரிவான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு நிதி அமைச்சகம் செயலாளர்களிடம் கோரியுள்ளதாக' அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

## எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

## அங்கம் -62

ந.வித்தியாதரன்

1986இல் யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு மாகாணப் பதிப்பை வெளியிட முயன்ற வீரகேசரி நிறுவனத்தின் அச்சு இயந்திரங்களை ஈ.பி.ஆர்.எல்.எவ். இராணுவத் தளபதி டக்ளஸ் தேவானந்தா கையகப்படுத்திய அந்தக் காலத்தை வாசகர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

வங்கிகள், நகை அடகு பிடிக்கும் நிலையங்கள், வசதியானவர்களின் வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டன. ஆலயங்களும் கூட விதிவிலக்கில்லாமல் இலக்காகின. வசதியானவர்கள், பணப்புழக்கம் உள்ளோர் கடத்தப்பட்டனர். பெருந்தொகைப் பணம் பறிக்கப்பட்டது. வாகனங்கள் பறிக்கப்பட்டன. கடத்திக் கப்பம் பெறுவதெல்லாம் நடந்தேறின. எல்லாம் விடுதலைப் போராட்ட இயக்கங்களின் தேவைக்கான நடவடிக்கை என்ற பெயரில் நியாயப்படுத்தவும் பட்டன.

வீரகேசரி நிறுவனத்தை அப்படி ஒரு சிக்கலில் மாட்டி கப்பம் அறவிட இத்தகைய முயற்சி எடுக்கப்பட்டு இருக்கும் என்று நான் நினைத்தேன். எங்கள் பத்திரிகையும் நிதி நிறுவனம் ஒன்றுடன் தொடர்பு பட்டிருந்ததால் அத்தகைய இலக்கு எங்களுக்கும் வைக்கப்படலாம் என்று ஆபத்தும் இருந்தது.

இத்தகைய அச்சுறுத்தல்களைச் சந்திக்க நாம் ஒரு தற்காலிகப் பாதுகாப்பு ஏற்பாட்டையும் கையாண்டோம். மீனுக்குத் தலையையும் பாம்புக்கு வாலையும் காட்டும் விலாங்குமீன் தந்திரம் அது. எங்கள் நிறுவனத்தை ஒன்றுக்கு மேற்பட்ட இயக்கங்களுடன் நெருக்கமாகக் காட்டும் உத்தி அது. ஏற்கனவே விடுதலைப் புலிகளுடன் – தளபதி கிட்டு மற்றும் திலீபன், கேடில்ஸ் போன்ற முக்கியஸ்தர்களுடன் மிக நெருக்கமாக நாம் பழகினோம் அல்லது அப்படி நாம் காட்டிக் கொண்டோம். இதனால் மற்ற இயக்கங்கள் எங்கள் மீது கை வைக்கப் பின்னடிக்கும் ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தி வைத்துக்கொள்ளவும் செய்தோம். இக்காரணத்தினால் மற்ற இயக்கங்கள் எங்களை நெருங்கா என்ற சுய நம்பிக்கை இருந்தது. அப்படி வீரகேசரியும் ஏதும் செய்து வைத்திருக்கும், அதைத் தாண்டி ஈ.பி.ஆர்.எல்.எவ். எப்படி அதன் மீது கை வைத்திருக்கும் என்று நான் சந்தேகித்தேன்.

அப்போதுதான் ஒரு தகவல் தெரியவந்தது.



வீரகேசரி யாழ்ப்பாணத்தில் தனது புதிய மாகாணப் பதிப்பை வெளியிட முடிவு எடுத்து, ஆயத்தங்களைச் செய்து, அச்சகத்தையும் கொண்டு வந்து இறக்கி, அலுவலகத்தையும் ஒழுங்குபடுத்தி, வெளியீட்டுக்கான திகதியை அறிவிக்கும் அளவுக்கு சென்றபோதும், அந்த நிறுவனத்தின் சார்பில், யாழ்ப்பாணத்தில் கொடி கட்டிப் பறந்து கொண்டிருந்த எந்த இயக்கத்துடனும், அமைப்புக்கள், தரப்புகளுடனும் எவரும் எந்த ஊடாட்டத்தையும், கலந்துரையாடலையும் செய்யவே



இல்லை என்பதுதான் அது. பிற்காலத்தில் வீரகேசரி நிர்வாகத்திலிருந்தவர்களுடனான என் தொடர்பாடலில் நான் அதனை உறுதி செய்து கொண்டேன். அப்போதுதான், பத்திரிகையை ஆரம்பிக்க முன்னர் இந்த இயக்கங்களின் தலைவர்களுடன் – தலைமைகளுடன் – சந்தித்து, ஊடாடி, ஒரு பழக்கத்தையும், நட்புறவையும் ஏற்படுத்திக் கொள்ளுங்கள் என்று சிவநாயகம் ஐயா தந்த ஆலோசனையின் மகத்துவத்தையும் பெறுமதியையும் நான் புரிந்து கொண்டேன்.

என் நெருக்கமான அந்த நண்பன் என்னை அன்று மாலை டக்ளஸ் தேவானந்தாவிடம் கூட்டிச் சென்ற போதும் அதனை நான் புரிந்து கொண்டேன். முன்கூட்டியே ஈ.பி.ஆர்.எல்.எவ். போன்ற முக்கிய அமைப்புகளுடன் ஓர் ஊடாட்டத்தை, உரையாடலை வைத்துக்கொண்டு இப்படி மாகாணப் பதிப்பை வீரகேசரி ஆரம்பித்திருந்தால் அது தப்பிப் பிழைத்திருக்கும் என்பதை நான் புரிந்து கொண்டேன்.

யாழ்ப்பாணம், அத்தியடியில் இருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் முகாமில் பலத்த பாதுகாப்பில் இருந்த டக்ளஸ் தேவானந்தாவை நானும் அந்த நண்பனும் அன்று மாலை சந்தித்தபோது டக்ளஸ் தேவானந்தா என்னிடம் முதலில் தாமே ஒரு கேள்வியை எழுப்பித் தாமே எனக்கு பதில் அளித்தபோது அவர் கூறிய விடயம் என்னைத் தூக்கி வாரிப்போட்டது.

"வீரகேசரி மெஷினை ஏன் தூக்கினேன் தெரியுமா?" என்று கேட்டார் அவர்.

"எல்லாம் உங்கள் நன்மைக்கே. உங்கள் நான்கு பத்திரிகைகளின் நன்மைக்கே" – என்றார் அவர். "நீங்கள் யாரும் எங்களுடன் பேசவில்லை. ஆனால் நானாக நிலைமையை யோசித்து எடுத்த முடிவு அது." – என்று விளக்கினார் என நினைவு.

"நான் உங்களுக்காக செய்ய... நீங்கள் என்னை மோசமாக விமர்சிக்கிறீர்கள். உங்கள் நண்பர் வந்து சொன்னார். அதுதான் உங்களை அழைத்து விளங்கப்படுத்த விரும்பினேன்" – என்றார் டக்ளஸ்.

*"சரியோ. பிழையோ உங்கள் நான்கு பத்திரிகைகளும் யாழ்ப்பாணத்திலிருந்து வருபவை. தமிழ்த் தேசியத்தைப் பற்றி நிற்பவை. எந்த இயக்கங்கள், தரப்பினருடனும் நீங்கள் கை கோர்த்தாலும் இந்த மண்ணின் வெளியீடுகள். கொழும்பில் இருந்து வரும் பத்திரிகை இங்கு கால் ஊன்றினால் அது இங்கு தமிழ்த் தேசியத்திற்கும் விடுதலைப் போராட்டத்திற்கும் ஆபத்தாகலாம். அதனால்தான் அதற்குத் தடை விதித்தோம். அதை அனுமதிக்க மாட்டோம்"* – என்ற சாரப்பட மிக உறுதியாக அவர் கூறினார் என்று நினைவு.

பத்திரிகையை யாழ்ப்பாணத்தில் வெளியிட முயற்சி எடுக்கும் முன்னர் இங்குள்ள களநிலைவரங்களை புரிந்துகொண்டு, அவர்கள் எங்களுடன் பேசி இருக்க வேண்டும். அந்தக் கள நிலைவரம் புரியாதவர்கள் இங்கு பத்திரிகை ஆரம்பித்தால் பிறகு நிலைமை விபரீதமாகி விடும் என்ற சாரப்படவும் அவர் தமது நடவடிக்கையை நியாயப்படுத்தினார் என நினைவு.

அவர் அப்படிக் கூறக் கூற, என் நினைவில் ஆசிரியர் சிவநாயகத்தின் அந்த ஆலோசனையின் மதிநுட்பம்தான் வந்து போன படி இருந்தது.

ஏதோ எங்களுக்காகப் பெரிய விடயம் ஒன்றைச் சாதித்து, அதை எமக்கு விளங்கப்படுத்தி, அதை நாம் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்ட திருப்தியாக எங்களை அனுப்பி வைத்தார் டக்ளஸ் தேவானந்தா.

இளைஞனான நான் அந்தச் சந்திப்பு முழுவதும் மிகவும் பவ்யமாகவே பேசினேன். ஈ.பி.ஆர்.எல்.எவ். என்ற பேரியக்கத்தின் ஒரு மூத்த தளபதியுடன் நெருக்கமான பரிச்சயம் கிட்டிய திருப்தி எனக்கு. அன்றைய நிலையில் இராணுவ ரீதியில் அத்தகைய உயர்வான, மதிப்பான இடம் டக்ளஸுக்கு இருந்தது. அவர் லெபனானில் விசேட இராணுவப் பயிற்சி பெற்றுத் திரும்பியிருந்தார் என்ற பேச்சும், அதனால் அவரின் இராணுவத் தகுதி, திறமை குறித்து மிகுந்த மரியாதையும் இருந்த காலகட்டம் அது.

தனது அன்றைய அந்த நடவடிக்கையை நியாயமானதுதானா, ஊடகத்தின் மீது கைவைத்தது சரிதானா என்று இப்போது அமைச்சராக இருக்கும் டக்ளஸ் தேவானந்தா கருதுவாரோ எனக்குத் தெரியாது. ஆனால் அன்று யாழ்ப்பாணத்தில் உள்ளூரில் இருந்து வெளிவரும் உதயன் உட்பட நான்கு பத்திரிகைகளின் தனித்துவமும், நின்று பிடித்தலும், நிலைத்தலும் உறுதி செய்யப்படுவதற்காகத்தான் தாம் அந்த நடவடிக்கையை எடுத்தார் என்று எனக்கு தெரிவித்த அதே கருத்தை அவர் இப்போதும் உறுதிப்படுத்துவார் என நம்புகிறேன். யாரேனும் சுயாதீன வட்டாரங்கள் அதனை அவரிடம் கேட்டு வெளிப்படுத்தினாலும் நல்லதுதான்.

இப்படி நான்கு உள்ளூர் பத்திரிகைகளின் நலனுக்காக கொழும்புத் தேசிய தினசரியான வீரகேசரிக்கு எதிராக அத்துமீறல் நடவடிக்கை ஒன்றை சுயாதீனமான எடுத்த டக்ளஸ் தேவானந்தா பின்னர் ஈ.பி.டி.பி. தலைவராக இங்கு வந்த பின்னர் 'செல்லும் செல்லாதவை எல்லாம் செட்டியார் தலை மீது' என்பது போல ஊடகங்களுக்கு எதிரான அராஜகங்கள் எல்லாம் அவர் மீது சுமத்தப்படும் நிலைக்கு ஆளானார். நிமலராஜன் படுகொலை, உதயன் மீதான தாக்குதல் என்று பல விடயங்கள் கட்டவிழ்ந்தன. டக்ளஸ் தேவானந்தா மீதும் அவரின் அமைப்பு மீதும் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. நிமலராஜனுக்கு நேர்ந்த கதியை ஒட்டி 'என் எழுத்தாயுதம்' என்னும் என் நூலில் நான் சில விடயங்களைப் பகிர்ந்திருந்தேன். டக்ளஸ் தேவானந்தா மீதான குற்றச்சாட்டுகள் குறித்து விவாதிப்பதற்கான தொடர் இதுவல்ல என்பதால் அவற்றை பிறிதொரு சந்தர்ப்பத்தில் பார்ப்போம் என குறிப்பிட்டு இத்துடன் விட்டு விடுகிறேன்.

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். அன்று எங்களுக்கு சிவநாயகம் ஐயா உரிய சமயத்தில் உரிய ஆலோசனை தந்து, தோன்றாத் துணையாய் இருந்தமை போல வீரகேசரிக்கும் சரியான ஆலோசனை கிடைத்திருக்குமானால், இயக்கங்களை உரிய முறையில் நேரத்துடன் கையாண்டு, அந்த மாகாணப் பதிப்பை தக்க வைப்பதற்கு அந்நிறுவனத்துக்கு வாய்ப்பு இருந்திருக்குமோ என்று நான் நினைப்பதுண்டு.

பின்னாளில் ஈ.பி.ஆர்.எல்.எவ்வைப் புலிகள் தடைசெய்த பின்னர், அந்த அச்சு இயந்திரம் புலிகளின் கட்டுப்பாட்டில் வந்தது. புலிகள் பலவந்தமாகக் கையகப்படுத்திப் பெற்றுக்கொண்ட ஈழமுரசு பத்திரிகை அதில் அச்சிடப்பட்டது. இந்திய அமைதிப்படையின் நடவடிக்கையை அடுத்து, புலிகளின் கட்டுப்பாடு யாழ்ப்பாணத்தில் செயலிழக்க, அந்த அச்சு இயந்திரத்தை வீரகேசரி நிறுவனம் ஒருவாறு மீட்டெடுத்து கொழும்புக்குக் கொண்டு சென்றது என நான் அறிந்தேன்.

(வளரும்....)

# வங்கியின் இதயத்தில் ஒரு பயணம் நிர்வாகி லயன் எஸ்.ரெங்கநாதன்!



தொகுப்பு:- தெல்லியூர் லயன் சி.ஹரிகரன்

லயன் எஸ்.ரெங்கநாதன் கொமர்ஷல் வங்கியின் சிலோன் பி.எல்.சியில் பணிபுரிந்த முதல் மாதத்துக்குள் தனது வாழ்நாள் முழுவதும் என்ன செய்ய விரும்பு கிறார் என்பதைக் கண்டுபிடித்து நேர்மையான தலைமைத்துவத்துடனும் சரியான திட்டமிடலின் ஊடாகவும் தனது பயணத்தை ஆரம்பித்தார்.

கொமர்ஷல் வங்கியின் சிலோன் பி.எல்.சியின் நிர்வாக இயக்குநர், தலைமை நிர்வாக அதிகாரி எனப் பல நிறைவேற்றுப் பதவிகளுக்கு இலக்கணம் புகட்டிய லயன் எஸ். ரெங்கநாதன், தனது தொழில் வாழ்நாள் முழுவதும் 39 ஆண்டுகளுக்கும் மேலாக வங்கியில் சேவையாற்றினார். ஒருவனின் வளர்ச்சிப் படிநிலை இவ்வாறுதான் அமையவேண்டும் என்பதற்கு வங்கியின் ஆரம்பநிலை உத்தியோகத்தராக இணைந்து தலைமை நிர்வாக அதிகாரியாக - நிர்வாக இயக்குநராக - உயர்ந்து ஏனைய வங்கியாளர்களுக்கும் முன்னுதாரணமாக வாழ்ந்துகாட்டியவர் லயன் ரெங்கா. பங்களாதேஷில் கிரெடிட் அக்ரிகோல் இந்தோசுவேஸின் வங்கி நடவடிக்கைகளைப் பெறுவதற்கு அவரது சிறப்பான தலைமைத்துவத்தால் குழுவை வழிநடத்தினார். மேலும் வங்கியின் செயற்பாடுகளைத் தனது முதல் ஐந்து ஆண்டு காலப்பகுதியில் அதிக மதிப்பீட்டில் வெற்றிகரமாக நிறுவினார்.

யுகே (எஃப்.சி.எம்.ஏ.), பட்டய உலகளாவிய மேலாண்மை கணக்காளர் (சி.ஜி.எம்.ஏ.), லண்டன் இன்ஸ்டிடியூட் ஆப் பேங்கிங் அண்ட் ஃபைனான்ஸ், யுகே (எஃப்.எல்.ஐ.பி.எஃப்.) மற்றும் வங்கியாளர்கள் இலங்கையின் இன்ஸ்டிடியூட் (இங்கிலாந்து) எவ்ஐஃ), அமெரிக்கா, லண்டன், ஜப்பான், தாய்லாந்து, அபுதாபி, இந்தியா மற்றும் பல நாடுகளில் விரிவான தலைமைத்துவம், மேலாண்மை மற்றும் வங்கி பயிற்சி என்பவற்றைப் பெற்றுத் தேர்ந்தார்.

ஜூலை 2003 ஆம் ஆண்டு வங்கியின் பங்களாதேஷ் நடவடிக்கைகளின் முதல் நாட்டு மேலாளராக அவர் நியமிக்கப்பட்டார், இது வங்கி தொடர்பில் அவரது முதலாவது வெளிநாட்டு நடவடிக்கையாகும். அவர் நாடு திரும்பியதும், வங்கியின் முதல் தலைமை இடர் அதிகாரியாக (சி.ஆர்.ஓ.) நியமிக்கப்பட்டார், மேலும் வங்கியின் ஒருங்கிணைந்த இடர் மேலாண்மை பிரிவு மற்றும் கொள்கைகளைத் தயாரித்து நிறுவுவதற்கான பொறுப்பாளராகவும் இருந்தார். ஏப்ரல் 2011 இல், வங்கியின் முழு கிளை வலையமைப்பையும் நிர்வகிப்பதற்கான ஒட்டுமொத்த பொறுப்போடு, தனிப்பட்ட வங்கிப் பிரிவின் துணை பொது மேலாளராக நியமிக்கப்பட்டார்.

லயன் ரெங்கா, ஜூலை 2014 இல், கொமர்சியல் வங்கியின் தலைமை நிறைவேற்று அதிகாரியாகவும் வங்கி வாரியத்தின் நிர்வாக இயக்குநராகவும் நியமிக்கப்பட்டார். இறுதியில், ஜூலை 2018 இல், வங்கியின் நிர்வாக இயக்குநர் - தலைமை நிர்வாக அதிகாரியின் முக்கிய பாத்திரத்துக்கு அவர் உயர்ந்தார். இது எல்.கே.ஆர் 1.5 டிரில்லியனுக்கும் அதிகமான சொத்துத் தளத்தையும், மொத்த வருவாய் எல்.கே.ஆர். 150 பில்லியனையும் கொண்டுள்ளது.



லயன் எஸ்.ரெங்கநாதன் நிர்வாக இயக்குநராகவும், வணிக மேம்பாட்டு நிறுவனத்தின் பி.எல்.சி. (சி.எஸ்.இ.யில் பட்டியலிடப்பட்ட) வாரிய உறுப்பினராகவும், கொமர்ஷல் பாங்க் ஆப் மாலைதீவு தனியார் லிமிட்டெட் துணைத் தலைவராகவும் பணியாற்றுகிறார். இவர் லங்கா நிதிச் சேவை பணியகம் மற்றும் இலங்கை வங்கிகள் சங்கம் (உத்தரவாதம்) லிமிட்டெட் இயக்குநராகவும் உள்ளார்.

இலங்கை சர்வதேச வர்த்தக சபையின் துணைத் தலைவர், இலங்கை வர்த்தக சபையின் நிர்வாக உறுப்பினர், பிரிட்டனுடனான வணிக கவுன்ஸிலின் நிர்வாக உறுப்பினர், இலங்கை இயக்குநர்கள் நிறுவனத்தின் உறுப்பினர், முதலாளிகள் சம்மேளனத்தின் உறுப்பினர். இலங்கை மற்றும் இலங்கை இந்தியா அமைப்பின் பொருளாளர் மற்றும் சர்வதேச லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநரின் ஆலோசகர் - மாவட்ட 306 பி 1.

லயன் ரங்கநாதன் பங்களாதேஷின் வங்கியாளர்கள் நிறுவனத்தின் பொது கவுன்ஸில் உறுப்பினராகவும், இலங்கை பங்களாதேஷ் வர்த்தக மற்றும் கைத்தொழில் சபையின் நிறுவுநர் தலைவராகவும், பங்களாதேஷில் உள்ள வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வர்த்தக மற்றும் தொழில்துறை சபையின் நிர்வாக உறுப்பினராகவும், கடந்த கால செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். வங்கியின் நிர்வாகிகள் சங்கம், சர்வதேச லயன்ஸ் கழக ஆளுநர்சபைப் பொருளாளர் - மாவட்ட 306 பி 1 மூன்று ஆண்டுகளாக மற்றும் கடந்த 5 ஆண்டுகளாக ஆளுநர் சபை உறுப்பினராகவும் செயலாற்றினார்.

அவரது சமூகச் சேவையை அங்கீகரிக்கும் விதமாக, அவர் ஒரு அகில இலங்கை சமாதான நீதிவானாக நீதி அமைச்சால் நியமிக்கப்பட்டார். வங்கியின் முதல் தலைமை இடர் அதிகாரியாக லயன் ரெங்கநாதன் எதிர்கொண்ட சவால்களைப் பற்றி பேசிய அவர், ஐந்து முக்கிய சவால்களைக் கூறினார்.

வங்கியின் மூன்று பெரிய அபாயங்களை நிர்வகிக்க சீரான எண்ணம் கொண்ட அதிகாரிகளைப் பாதுகாப்பதே முதல் சவால்.

இரண்டாவது சவால் - வங்கி எதிர்கொள்ளும் கடன், செயற்பாட்டு மற்றும் சந்தை அபாயத்தின் கீழ் உள்ள முக்கிய ஆபத்து குறிகாட்டிகளை இனங்காண்பது.

மூன்றாவது சவால் - இடர் நிர்வாகத்தின் முக்கியத்துவம் தொடர்பாக ஊழியர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்.

வாடிக்கையாளர் சேவை நிலைகளை பாதிக்காமல் கடன் இடர் மதிப்பீட்டு நடைமுறைகளை செயற்படுத்துவதில் நான் பல சிக்கல்களை நிர்வகிக்க வேண்டியிருந்தது. வங்கியில் ஒரு வலுவான மற்றும் பயனுள்ள இடர் மதிப்பீட்டு கலாசாரத்தை உருவாக்குவதே பெரிய சவாலாக இருந்தது. - என்று லயன் ரெங்கா கூறினார்.

ஈஸ்டர் தாக்குதல்கள், தேர்தலுக்கு வழிவகுக்கும் கொந்தளிப்பான அரசியல் நிலைமை, மற்றும் துரதிர்ஷ்டவசமாக, 2020 ஆம் ஆண்டு பொருளாதார மறுமலர்ச்சி ஆண்டு என்று உறுதியளித்ததன் காரணமாக 2019 ஆம் ஆண்டில் மந்தமான பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டது, சர்வதேச ரீதியில் பலவற்றை பாதித்த கொவிட்- 19 உலகளாவிய தொற்றுநோயை இலங்கைக்குக் கொண்டு வந்தது. எவ்வாறாயினும், நாட்டின் துறைகள், நிர்வாக இயக்குநராக - தலைமை நிர்வாக அதிகாரியாக - லயன் ரெங்கநாதன் அத்தகைய சிக்கலான காலகட்டத்தில் கூட வங்கியை நன்றாக வழி நடத்தி பெருமை பெற்றார்.

கொவிட் கால கட்டத்தில் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் நிதி மற்றும் கடன்களை திருப்பிச் செலுத்துவதற்கு உதவுவதற்காக தொழில்துறை விதிமுறைகள் மற்றும் இலங்கை மத்திய வங்கி (சிபிஎஸ்எல்) வழங்கிய விதிமுறைகள் மற்றும் வழிமுறைகளுக்கு அப்பால் வங்கி சென்றது. எந்தவொரு பிரிவுகளையும் தவிர்த்து, வங்கியின் அனைத்து வகையான வாடிக்கையாளர்களின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் வங்கி வழங்கும் நிவாரணத் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டன. கார்ப்பரேட்டுகள், எஸ்.எம்.இ வாடிக்கையாளர்கள், தனிநபர்கள், கிரெடிட் கார்டுதாரர்கள் மற்றும் செயற்படாத கடன் வாங்குபவர்களுக்கு கூட வெவ்வேறு நிவாரணத் திட்டங்களுடன் வடிவமைக்கப்பட்டு சிறந்த - ஆளுமை படைத்த - தலைமைத்துவமுடைய - அறிவுமிகுந்த - வங்கியாளனாகத் தன்னை உலகுக்குப் புடம்போட்டுக் காட்டினார் லயன் ரெங்கா.

தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட வணிகங்களுக்கு நிவாரண நடவடிக்கையாக, வங்கி 'அருனெல்லா' நிதி உதவித் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. சிபிஎஸ்எல் அறிமுகப்படுத்திய ஒரு திட்டத்தின் மூலம் தொழில் முனைவோருக்கு வங்கி உதவியது, 4 வீத பி.ஏ. சலுகை வட்டி விகிதத்தில் பணி மூலதன கடன்களை வழங்க ஒழுங்கமைக்கப்பட்டது.

'தொற்றுநோய்க்குப் பிறகு, கொவிட் - 19 ஆல் பாதிக்கப்பட்ட எஸ்.எம்.ஈ. தொழில்முனைவோருக்கு ஆதரவளிப்பதற்காக ஒரு மேம்பாட்டு நிதி நிறுவனமான ஐ.எப்.சி. இலிருந்து 50 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியைப் பெற்ற முதல் வங்கி கொமர்ஷல் வங்கி' என்று லயன் ரெங்கநாதன் கூறினார்.

நிர்வாக இயக்குநர் - சி.ஈ.ஓ. இன் உத்தரவின் பேரில், இந்தக் காலகட்டத்தில் வங்கியால் செயற்படுத்தப்பட்ட பிற முயற்சிகளில், மைக்ரோ தொழில்முனைவோர் மற்றும் எஸ்.எம்.ஈக்களுக்கான சிறப்பு கொவிட் ஆதரவு கடன் திட்டங்கள் அடங்கும், அவை குறைந்த வட்டி விகிதத்தில் வழங்கப்பட்டன. மேலும், கிரெடிட் கார்டுதாரர்களுக்கு சலுகைகள், கட்டண தள்ளுபடிகள் மற்றும் டிஜிட்டல் சேவைகளை இலவசமாக வழங்குவதோடு கூடுதலாக சாதாரண கடன் விகிதங்களும் குறைக்கப்பட்டன.

இவரது காலத்தில், கொமர்ஷல் வங்கி 11 வாகனங்களில் 'மொபைல் கேஷ்' வசதியை வழங்குவதன் மூலம் பொதுமக்களுக்கு உதவியது, இது வணிக வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு பயனளித்தது மட்டுமல்ல. இந்த வாகனங்கள் முன்பே அறிவிக்கப்பட்ட வழித்தடங்களில் இயக்கப்பட்டன, பணத்தை குறைவாக இயக்கும் வாடிக்கையாளர்கள் தங்கள் வங்கிக் கணக்குகளில் இருந்து பணம் எடுக்க அனுமதிக்கப்படுகின்றனர்.

வங்கித் துறையில் டிஜிற்றல் மார்க்கெட்டிங் பங்கு எவ்வாறு உருவாகியுள்ளது என்பதை விவரிக்கும் மூத்த வங்கியாளர் லயன் ரெங்கா. 'கொவிட் - 19 இன் எதிர்மறையான தாக்கங்கள் எவரும் கணிக்க முடியாத அளவிற்கு மிக நீண்ட காலமாகவும் நீடித்ததாகவும் உள்ளன. இயற்கையாகவே, வங்கித் துறையும் உலகளாவிய எதிர்மறை தாக்கங்களின் அழுத்தத்தை உணர்கிறது. இறுதிக் காலத்தில் டிஜிற்றல் சேவைக




ளுக்கான தேவை அதிவேகமாக வளர்ந்தது மற்றும் உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள் விதிமுறைகளைத் தளர்த்துவதன் உதவியுடன், இந்த கோரிக்கையை நாங்கள் பூர்த்தி செய்ய முடிந்தது, இருப்பினும் நிலைமைகள் நிச்சயமாகச் சவாலானவை. முழு துறையும் அந்த சவாலை நன்றாக எதிர்கொண்டன என நான் உணர்கிறேன்.

'வளர்ச்சி வேகம் தொடர்ந்து காணப்படுவது ஊக்கமளிக்கிறது. ஃபிளாஷ் டிஜிற்றல் வங்கி கணக்கு, காம் பேங்க் டிஜிற்றல் வங்கி பயன்பாடு, பேமாஸ்டர் கார்ப்பரேட் கட்டண போர்டல் மற்றும் பிற வணிக அடிப்படையிலான கட்டண முறைகள் போன்ற டிஜிற்றல் டச் புள்ளிகளின் அனைத்து துறைகளிலும் கொமர்ஷல் வங்கி வளர்ச்சியைக் கண்டது. இறுதிக் காலத்தில் சேவைகளை எளிதாக்குவதற்காக நாள்களில் பணிபுரியும் குழுக்களுடன் வங்கி கூடுதல் ஆதாரங் களைப் பயன்படுத்தியது. இதுவரை ஆய்வு செய்யப்படாத மற்றும் பயன்படுத்தப்படாத சில வாடிக்கையாளர் சுயவிவரங்களைத் தட்டச்சு செய்வதற்கான வாய்ப்பாக இது இருந்தது என்பது சுவாரஸ்யமானது, அதாவது முதிர்ச்சிடைந்த பகுதிகள் போன்றவை, கிளைகளை அடிக்கடி பார்வையிடப் பயன்படுகின்றன. டிஜிற்றல் சேவைகளுக்கான வாடிக்கையாளர் உள்நுழைவு டிஜிற்றல் சேவைகளுக்கான எங்கள் மூலோபாய சாலை வரைபடத்துக்கு ஏற்ப தொடரும்.

(08ஆம் பக்கம் பார்க்க)



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 117

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்



**328. இந்த ஒற்றுமையீனம் தமிழ் மக்களிடையே அறியப்படவில்லையா? அது எப்படி நம்மைப் பாதித்தது?**

தமிழ் மக்களுக்கு அவை நன்றாக தெரிந்திருந்தன. அவை பற்றிப் பேசினார்கள். பத்திரிகை ஆசிரியர்கள் தங்கள் தலையங்கங்களில் பத்தி பத்தியாக எழுதி, இது எமது பரவணிக் குணமா என்றும் கூடக் கேட்டார்கள். ஆனால் தமிழ் மக்களிடையே இருந்த நண்டுகளின் குணாதிசயம் மாறவில்லை. 'நான்' என்ற அகங்காரம் அழிவதாய் இல்லை. அந்த "நான்" அழியாததால் "நாம்" தோன்றவேயில்லை. ஒன்று சேர்ந்தவர்கள் எல்லோரையும் காலவாரியாகப் பார்த்தால், இன்றுவரை ஒருவராவது தமது கட்சியையோ, அமைப்பையோ கலைத்து விட்டு வந்து ஒற்றுமைப்படவில்லை. தன் வீடு, தன் தோட்டம், தன் முதல், அதற்கான பயன் என்றே வந்தார்கள். அர்ப்பணிப்பைப் பற்றிப் பேசவில்லை. ஆனால் தமிழ் மக்களது ஒற்றுமையீனத்தை மற்றவர்கள் அறிந்து அதனை அவர்களுக்கு எதிரே பாவித்தார்கள்.

இவை சமகாலத்தில் எப்படிப் பாதித்தன என்பதை மேலும் புரிந்து கொள்ள போரின் ஏப்ரல் 2009 காலத்திற்கும் நாம் எதிர்நோக்கியவற்றுக்குச் செல்ல வேண்டும்.

புலம்பெயர் தரப்பிலிருந்து சென்ற குழுவினரில் பெரும்பாலானோர் கொழும்பில் நடந்த பேச்சுவார்த்தைகளை முடித்து கொண்டு முகாம்களில் இருக்கும் மக்களைச் சந்திக்கக் கட்டுப்பாடுகளுக்கு எதிரே அனுமதிகள் பெற்றுக் கொண்டு சென்றனர். மக்களுக்கு அரசாங்கம் தந்ததற்கு மேல் பல விதங்களில் தனிப்பட்ட ஆதரவுகள் தேவையாயிருந்தன. இயலக்கூடிய வகைகளில் இவற்றை முன்னெடுக்கப் புலம்பெயலாளர்களிடம் உதவிக் கரங்கள் நீட்டினோம். அதே சமயம் கொழும்பு பேச்சுக்களும் மக்கள் விவரித்தவையும் எங்களில் ஓர் அங்கலாய்ப்பையும் ஏற்படுத்தின. ஆனந்தபுர சமரிடையேயும் மனிதாபிமான வழிகளை நாம் ஏற்படுத்தக் கேட்டதும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரையும் ஐ.நாவின் அமைப்புகளையும் முகாம்களுக்குச் சென்று பார்வையிட, மேற்பார்க்க அனுமதி கொடுப்பதற்கு கோரியபோதும் வந்த பதில்களும் விடுதலைப் புலிகளைக் குற்றம் கூறுபவையாக இருந்தனவே ஒழிய, மனிதாபிமானப் பார்வையில் இருந்து வந்த வகையாகப் படவில்லை. அப்படியும் நாங்கள் எமது முயற்சிகளையும் தொடர்ந்தோம். அவற்றிற்கு வசதியாக சிலர் நான் உட்பட ஏப்ரல் 03 அல்லது 04 ஆம் திகதி திரும்பி வந்தோம். இங்கு வந்ததும்தான் புலம்பெயர் மக்களின் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களால் நடத்தப்பட்டுக் கொண்டிருந்த விஷமத்தனமான பிரச்சாரங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. அவற்றின் மொத்த நோக்கமே எங்களை வழமையாகச் செய்வது போல் துரோகியாக்குவதுதான். நாங்கள் இந்த பேச்சுவார்த்தைகளுக்குப் புறப்படுமுன் பலருடன் விடுதலைப் புலிகளின் சில முகவர்களோடு கூட பேசியிருந்தாலும், தமிழர் தேசியக் கூட்டமைப்பின் சம்பந்தனோடு அதன் நோக்கங்கள் பற்றி அளவளாவுயிருந்த போதிலும் தமிழ் மக்களின் நன்மைக்கான பொது நோக்கில் ஓர் ஒற்றுமையுடன் பார்க்காது "துரோகிகள்" முத்திரை குத்துவதிலேயே குறியாயிருந்தார்கள்.

அதைச் செய்துவிட்டால் போரை வென்றுவிடலாம் அல்லது போர் நிறுத்தம் நடந்துவிடும் என்று கருதினார்களோ என்னவோ தெரியாது. ஆனால் விரக்தியின் உச்சத்தில் பாரிய உதவிகளுக்குக் கரம் நீட்டிய போது வந்த அவர்களது பதில்களும் நடப்புகளும் தான், எங்களது ஒற்றுமையின் பிரதிபலிப்புகளை காட்டின.

**329. அவை எவை? விளக்குவீர்களா?**

அவற்றை விவரித்து, எங்களை சுய புராணங்களாக்காமல் புரிதலுக்கு சிலவற்றைச் சொல்லுகிறேன்.

அவை அங்கு முகாம்களில் வாடும் மக்களுக்கானாலும், அச்சமயம், அவற்றுக்கு அனுமதி பெற்று, அந்த உதவிகளை உடனடியாகச் சேர்ப்பித்து விட முடியுமானாலும், அவற்றை எங்கள் மூலம் அனுப்பப்பட முடியாது, தங்கள் வழிகளிலேயே அனுப்புவோம் என்பது. அடுத்து அந்த மக்கள் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பு வலயங்களை விட்டு, வெளியேறி வந்தமையால் அவர்களும் துரோகிகளாகிறார்கள், ஆகவே அவர்களின் பராமரிப்பை அவர்கள் ஸ்ரீலங்கா அரசிடமே எதிர்பார்க்க வேண்டும் என்ற விதண்டாவாதம். எனக்கிருக்க கூடியதான சிறிய ஆளுமையில் இந்த விதமான சின்னத்தனமானதும் விஷமத்தனமானதுமான பரப்புரைகளுக்கு



இடையிலும், எங்களது ஒற்றுமைக்கும், அந்த மக்களினது வாழ்வுக்கும், மண்ணில் விடுதலைப் புலிகளின் அங்கலாய்ப்புக்கும் இடையில் எது அவசியம் எனவும் சொன்னேன்.

எங்களது மக்களின் முன்னால் நிற்பது இப்படியான அற்பத்தனமான அரசியலே. அந்த சகதியிலிருந்து மேலெழுந்து வரப் பாருங்கள். அங்கிருந்து இப்பொழுது போராட்டமென்று முழங்காமல், எம்முன்னால் இருப்பவற்றைப் பாதுகாத்து, ஓர் ஆக்கபூர்வமான வழியில் அரசியல் தீர்வை நோக்கி செல்வதே, இப்பொழுது உள்ள வழி. அது, அங்குள்ள தமிழ் மக்களின் விமோசனத்திற்கு அல்லாமல் இங்கு புலம்பெயரில் வாழும் சில மக்களின் மகிமைகளுக்காக அல்ல. அவை செய்யப்படுகின்றனவென்றால் அது அங்குள்ள மக்களுக்காக. சர்வதேச நாடுகள் – ஆஸ்திரேலியா உட்பட – போர் நிறுத்தம் வேண்டுமென்று கோரினாலும் இதுவரை எந்த நாடும் அதற்காகத் தங்களது முஷ்டியை உயர்த்தவில்லை. அதுதான் தமிழ் மக்களின் முன்னேயுள்ள மிகப் பெரிய கேள்வி. அது ஏன் என்பதற்கு இந்தப் போரை இதுவரை நடத்தியவர்களும் அதற்கு ஊக்கம் தந்தவர்களும் தான் பதில் கூற வேண்டும்.

ஒவ்வொரு நாளும் மேலும் மேலும் மக்கள் இந்த முகாம்களுக்கு வந்து சேர்கிறார்கள். ஏனெனில் அவர்கள் வாழ விரும்புகிறார்கள். தங்களுடைய குழந்தைகளுக்கு ஒரு வாழ்வைத் தேட அங்கலாய்க்கிறார்கள். அவர்கள் உங்களிலிருந்தும் என்னிலிருந்தும் வேறுபட்டவர்களல்லர். இவ்வளவு காலம் பட்ட அவர்களின் வேதனைகளின் பின்னும் அவர்கள் துரோகிகளா? அவர்கள் மேல் எங்களது அக்கறை இருக்கக்கூடாதா? அப்படியில்லாமல் புலம்பெயரில் இருக்கும் சிலரின் மகிமைகளுக்காக அவர்கள் செத்து மடியவேண்டுமா? மகிமையைதான் இவர்கள் தேடுகின்றார்களாயின் இவர்கள் அங்கு சென்று அவர்களின் இடத்தை எடுத்துக் கொண்டு, தங்கள் பிள்ளைகளையும் அந்த மக்களின் குழந்தைகள்போல ஏன் சீர்திருத்த முகாம்களுக்கு அனுப்பக் கூடாது?

எங்களிடையே இருக்கும் மனவேதனையின் உணர்வுகளையும் அங்கலாய்ப்புகளையும் அவை ஏன் என்பதையும் நான் புரிந்து கொள்கிறேன். அந்த இளைஞர்கள் தங்கள் எதிர்கால கனவுகளையெல்லாம் தூக்கி எறிந்து பலபேரை போல வெளிநாடுகளுக்கு வரக்கூடிய சந்தர்ப்பங்களையும் மறுத்து, தமிழ் மக்களின் விடுதலைக்காகத் தங்களை கழுத்தில் சயனைட் குப்பியை தொங்க வைத்துக் கடித்துனே உயிரை விடவேண்டும்? எங்களில் பலபேர் மாதிரி இங்கிருந்து பிழைத்திருக்கலாம். இராணுவத்தின் வெற்றி என்பதும் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்படுவதும் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு ஒரு பாரிய பின்னடைவு என்பது எங்களால் ஜீரணிக்க முடியாததாயினும், இவற்றின் மத்தியிலேயே ஏதோ இருப்புக்களை பாதுகாக்க சேமித்து வைக்க, பேச்சு வார்த்தைகள் ஒன்றே அதைச் செய்யக்கூடும். அப்படியில்லாவிட்டால் நாம் எல்லாவற்றையுமே இழந்து விடுவோம். ஒருவருக்கு எதிரே அழுக்கு எறிந்து, சர்வதேசத்துக்கு அவற்றை சாணி எறிவதில், நடக்கப் போவது எதுவும் இல்லை. அதை விட்டு எமக்குள் இருக்கும் சக்திகளை ஒன்றாக்கி எமக்கு முன்னுள்ள தேவைகளை நிறைவேற்றுவோம். அவை பெருமளவில் உண்டு.

உங்களில் பலர் விடுதலைப் போராட்டம், இளைஞர்கள் என்று வரும் முன்னே – விடுதலை இயக்கங்கள் என முளைகள் வரும் காலத்திற்கு முன் – தமிழ் மக்களின் நலன்களில் என்னை இணைத்துக் கொண்டவன். எங்களில் வந்த பலரும் அவ்வாறானவர்களே. அவர்கள் எவருக்கும் இப்படியான துரோகத்தால் பயன்பெற வேண்டுமென்றோ அதனால் தனிப்பட்ட மகிமை பெறலாமென்ற தேவைகள் இருக்கவில்லை. அங்குள்ள மக்கள் தங்களுக்கு ஒரு நிம்மதியான வாழ்க்கை வேண்டும் என்று எழுந்த குரல்களினால், அது அவர்களது சொந்தம் என்ற ஆதங்கத்தில் தான் சொன்னார்கள் – எனப் பலபேரோடும் விவாதங்களும் எழுத்துக்களும் இருந்தன.

இவை ஒரு பக்கத்தில் நடந்து கொண்டிருக்க விடுதலைப் புலிகளின் ஆளுமைகள் சிலரும், மண்ணிலிருந்த அவர்களின் தொடர்பாளர்களும் ஒரு போர் நிறுத்தத்துக்கு மேலும் ஆதரவுகள் தருமாறும், அன்றில் எஞ்சியுள்ள விடுதலைப் புலி போராளிகள் சர்வதேச அன்றில் இன்னுமொரு வெளிநாட்டு இராணுவத்தின் முன்னே சரணடைய ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாறும் கேட்டார்கள்.

(வளரும்.........)



# சர்வதேசம் நீதி வழங்கும் என்ற நம்பிக்கையில் வீதியோரம் மக்கள்

## சாள்ஸ் எம்.பி. தெரிவிப்பு



நிச்சயமாக ஒரு நாள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி சர்வதேச சமூகத்திடம் இருந்து கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இன்றும் நமது உறவுகள் வீதியோரம் காத்திருக்கின்றனர் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான ஓகஸ்ட் 30 ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில் –

இலங்கைப் படையினரால் கைது செய்யப்பட்டு மற்றும் சரணடைந்து பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் நீதியைக் கோரி நிற்பதோடு இது தொடர்பாகச் சர்வதேசத்துக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஓகஸ்ட் மாதம் 30ஆம் திகதி சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தினமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் 2009 ஆம் ஆண்டு மே மாதம் நிறைவடைந்த நேரத்தில் பலர் படையினரிடம் சரணடைந்தனர். இவ்வாறு சரணடைந்த ஆயிரக்கணக்கானோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு – கிழக்கு மாகாணத்தில் கடந்த 10 வருடங்களில் தொடர்ச்சியாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சுழற்சி முறையில் தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வந்த போதிலும், இன்று வரை காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான எந்தவிதத் தகவல்களும் எமது உறவுகளுக்குக் கிடைக்கவில்லை.

இறுதி யுத்தத்தில் தமது கைகளால் பாதுகாப்புப் படையினரிடம் கையளிக்கப்பட்ட எமது உறவுகள் எங்கே? என பல உறவுகள் இன்றும் வீதியோரம் கண்ணீர் விட்டுக் கதறி அழுது கொண்டிருக்கின்றனர்.

நிச்சயமாக ஒரு நாள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி சர்வதேச சமூகத்திடம் இருந்து கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இன்றும் நமது உறவுகள் வீதியோரம் காத்திருக்கின்றனர் என அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நித்திரையில் பெண்ணின் கழுத்தில் கத்திவைத்து தங்கச்சங்கிலியை அறுத்து சென்ற கொள்ளையர்

மட்டக்களப்பு சுவிஸ் கிராமத்தில் வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த பெண் ஒருவரின் கழுத்தில் கொள்ளையர் ஒருவர் கத்தியை வைத்து அவரின் கழுத்திலிருந்த 3 பவுண் தங்கச்சங்கிலியைப் பறித்து எடுத்துச் சென்ற சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பிரதேசத்திலுள்ள வீடு ஒன்றில் உரிமையாளர் தனது வீட்டை இடித்துப் புனரமைத்து வருகின்ற நிலையில் அதே காணியில் தற்காலிகமாக வீடு ஒன்றை அமைத்து வசித்து வருகின்ற நிலையில் சம்பவதினமான திங்கள் அதிகாலை 3.30 மணிக்கு வீட்டின் உரிமையாளர் அவரது மனைவி மற்றும் வயதான மாமியார் உட்பட 3 பேர் உறங்கிக் கொண்டிருந்துள்ளனர்.

இந்த நிலையில் அமைக்கப்பட்ட தற்காலிக வீட்டின் தகரக் கதவைத் திறந்து வீட்டுக்குள் கொள்ளையர் ஒருவர் புகுந்துள்ளார். உறக்கத்திலிருந்த 45 வயதுடைய பெண்ணின் கழுத்தில் கத்தியை வைத்து கழுத்தில் இருக்கும் தங்கச்சங்கிலியைக் கழற்றி தருமாறும் அல்லது கத்தியால் வெட்டி கொலை செய்வேன் என மிரட்டியுள்ளார்.

இதனையடுத்து கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியைக் கழற்றி கொடுத்த நிலையில் அதனைப் பறித்தெடுத்து கொள்ளையன் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளான் எனப் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. இதனையடுத்து குறித்த வீட்டுக்கு பொலிஸ் தடயவியல் பகுப்பாய்வு பிரிவினர் சென்று கொள்ளை தொடர்பாக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கொரோனாத் தொற்றால் இதுவரை 4,200 கர்ப்பிணிப் பெண்கள் பாதிப்பு

இலங்கையில் இதுவரை சுமார் 4 ஆயிரத்து 200 கர்ப்பிணிப் பெண்கள் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 900 பேர் தற்போது மருத்துவ சிகிச்சையில் உள்ளனர் என்று குடும்ப சுகாதார பணியக பணிப்பாளர் வைத்தியர் சித்ரமாலி டி சில்வா கூறியுள்ளார் .

சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் செய்தியாளர் சந்திப்பில் கருத்துரைத்த அவர் –

கொவிட் நோயால் பாதிக்கப்பட்ட 32 கர்ப்பிணித் தாய்மார்கள், இதுவரை உயிரிழந்துள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளார்.

75 வீத கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தற்போது வரை தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. கர்ப்பிணித் தாய்மார்கள் நெரிசலான இடங்களுக்குச் செல்ல வேண்டாம் என்றும் கொவிட் போன்ற அறிகுறிகள் உள்ளவர்களைத் தவிர்க்கவும் என அவர் அறிவுறுத்தியுள்ளார். கொவிட் தொற்று இல்லாத, கருவுற்ற பெண்கள், வீட்டிலுள்ள உறுப்பினர்களிடம் இருந்து விலகி இருக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

# வங்கியின் இதயத்தில் ஒரு பயணம் நிர்வாகி லயன் எஸ்.ரெங்கநாதன்!



(06ஆம் பக்கத் தொடர்ச்சி...)

டிஜிற்றல் உருமாற்றம் என்ற தலைப்பில் மேலும் சேர்த்து, நிர்வாக இயக்குநர் – தலைமை நிர்வாக அதிகாரி வங்கியின் எதிர்கால விரிவாக்கங்கள் பெரும்பாலும் டிஜிற்றல் முன் மற்றும் மெய்நிகர் தளத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும் என்று கூறினார்.

'வங்கிகள் ஒரு பொருளாதாரத்தின் முதுகெலும்பாகுமா?' என்று லயன் ரெங்கநாதனிடம் கேட்டபோது, வங்கித் துறை நாட்டின் பொருளாதாரத்தை எவ்வாறு பாதிக்கிறது என்பதை விளக்கினார். விரிவாக நகர்ந்த அவர், 'நாட்டின் பொருளாதாரத்தில் வங்கித் துறை ஒரு முக்கிய பங்கைக் கொண்டுள்ளது, ஏனெனில் இது உள்நாட்டு, சர்வதேச வர்த்தகம் மற்றும் வர்த்தகத்தை எளிதாக்குவதன் மூலம் வைப்புத்தொகையை ஏற்றுக்கொள்வதன் மூலமும் வணிகங்களுக்கு கடன் வழங்குவதன் மூலமும் பொருளாதாரத்துக்கு பணப்புழக்கத்தை வழங்குகிறது. வணிகங்கள் மற்றும் சில்லறை வாடிக்கையாளர்களுக்கு வங்கிகள் நிதி ஆலோசனை சேவைகளை வழங்குகின்றன.

கடந்த 2 ஆண்டுகளில் நம் நாடு இரண்டு பெரிய பொருளாதார தாக்குதல்களை சந்தித்து வருகின்றமை மிகவும் துரதிர்ஷ்டவசமானது. கொவிட் தொற்று நோய் எங்கள் கடன் வாங்குபவர்களைக் கிட்டத்தட்ட பாதித்தது. எனவே, இலங்கையில் உள்ள ஒரே வங்கி, எங்கள் வாடிக்கையாளர்களின் கடினமான சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, ஆரம்பகால குடியேற்றங்களுக்கான 'தள்ளுபடிகள்' உள்ளிட்ட பலவிதமான கொடுப்பனவு நிவாரணத் திட்டங்களைக் கொண்டு வந்தது. செயற்படாத கடன் வாங்குபவர்களுக்கு கூட 50 வீத வட்டி தள்ளுபடி வழங்கப்பட்டது திருப்திகரமான திருப்பிச் செலுத்தும் தொகைகள் ஒப்புக்கொள்ளப்பட்டன.

அரசாங்கத் திட்டங்களுக்கு மேலாக நாங்கள் தடைக்கால வசதிகளை விரிவுபடுத்தியுள்ளோம், கடன் வாங்கியவர்களின் சரியான நிலைமையை அடையாளம் காணவும், ஜதார்த்தமான திருப்பிச் செலுத்தும் திட்டத்தில் உடன்படவும் எங்கள் குழுக்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. இந்த அணுகுமுறை பாதிக்கப்பட்ட வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் ஆரம்ப மறுமலர்ச்சிக்கு உதவும் என்று நாங்கள் நினைக்கிறோம்.

லயன் ரெங்கநாதனின் கூற்றுப்படி, கொமர்ஷல் வங்கி தனித்துவமானது. அதன் முன்னோடி தயாரிப்புகள் மற்றும் சேவைகள், குறிப்பாக டிஜிற்றல் வங்கியியல் துறையில் மற்றும் அனைத்து வாடிக்கையாளர் பிரிவுகளுக்கும் அவர்களின் தேவைகளை அடையாளம் கண்டு தனிப்பயனாக்கப்பட்ட தீர்வுகளை வழங்க வங்கி நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

கார்ப்பரேட் சமூக பொறுப்புணர்வு திட்டங்களில் வங்கியின் ஈடுபாட்டை வலியுறுத்திய லயன் ரெங்கநாதன், நாட்டின் சில தனியார் துறை நிறுவனங்களில் கொமர்ஷல் வங்கி ஒன்றாகும், இது ஒரு சிறப்பு சி.எஸ்.ஆர். அலகு உள்ளது, இது ஆராய்ச்சி, அடையாளம், மதிப்பீடு, குறுகிய பட்டியல் மற்றும் வாய்ப்புகளுக்கான திட்டங்களைச் சமர்ப்பித்தல் வாழ்க்கையையும் நாட்டையும் அர்த்தமுள்ள வகையில் உருவாக்கும் வங்கி. ஒரு நிலையான மற்றும் நன்கு அமைக்கப்பட்ட செயல் திட்டத்தின் மூலம் நாட்டின் எதிர்காலத் தலைமுறையினருக்கு தொழில்நுட்பக் கல்வியை மேம்படுத்துவதில் வங்கி பெரிதும் ஈடுபட்டுள்ளது, இது பாடசாலைகளுக்குத் தகவல் தொழில்நுட்ப ஆய்வகங்களை நன்கொடையாக ஆரம்பித்து படிப்படியாக ஒன்லைன் கற்றல் மற்றும் தொழில்நுட்பக் கல்வியின் தேசிய அளவிலான முயற்சிகளாக உருவெடுத்துள்ளது. – என்றார்.

முடிவில், நிர்வாக இயக்குநர் – தலைமை நிர்வாக அதிகாரி லயன் ரெங்கநாதன் கூறினார் –

உலகளவில் தொற்றுநோய்க்கு நிரந்தரத் தீர்வு கிடைக்காத சூழல் இன்னும் நிச்சயமற்றதாக உள்ளது. இதன் பொருள் நமது பொருளாதாரத்தின் முக்கிய துறைகளை மீட்கவும் அவற்றின் உகந்த திறனில் மீண்டும் செயற்பாடுகளை ஆரம்பிக்கவும் அதிக நேரம் எடுக்கும். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வீழ்ச்சி மற்றும் கூடுதல் செலவுகள் காரணமாக இந்தத் துறையின் மீதான கூடுதல் அழுத்தம் மற்றும் மீட்பு முயற்சிகளில் குறுக்கீடுகள், இருப்பு நிலைகள் மற்றும் வங்கித் துறையின் ஆரோக்கியத்தை ஆணையிடும் இரண்டு முக்கிய விகிதங்களை எதிர்மறையாகப் பாதிக்கும், அதாவது மூலதனம் போதுமான மற்றும் திரவ சொத்து விகிதங்கள். எதிர்பாராத சூழ்நிலைகளைப் பூர்த்தி செய்ய வங்கிகள் போதுமான மூலதனத்தை விட அதிகமாகப் பராமரிக்க வேண்டும். நாட்டின் மதிப்பீட்டு தரமதிப்பீடு உள்ளிட்ட பல்வேறு சவால்களுக்கு மத்தியில் ஐ.எஃப்.சியிலிருந்து 50 மில்லியன் அமெரிக்க டொலர் ஈட்டி தனியார் இடத்தை ஈர்க்க முடிந்தது என்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

வங்கித் துறை அதன் செயற்பாடுகள், வழிகாட்டுதல்கள் மற்றும் செயல்முறைகளில் பல மாற்றங்களைச் செய்ய வேண்டும். கடன் தரம், வாடிக்கையாளர்களின் வகைப்பாடு, செயற்பாட்டு வழிகாட்டுதல்கள் சிலவற்றை மாற்றுவதற்குப் பொருந்தக்கூடிய அளவுருக்கள் மாறிவிட்டன. இன்னும் மாறிக்கொண்டே இருக்கின்றன. மேலும், இந்தத் துறை கணிசமான அளவிலான மனிதவளத்தை நிலையான சேவை மற்றும் பாதிக்கப்பட்ட வசதிகளை மறுவாழ்வு செய்யப் பயன்படுத்த வேண்டும். இந்தத் துறை மிகவும் மாறுபட்ட சூழலில் செயற்பட வேண்டியிருக்கும், மேலும் கடன் மதிப்பீடுகள், இடர் பசி மற்றும் கணக்கியல் தரநிலைகள் வரை அனைத்தும் நடுத்தர காலத்தில் மாற்றங்களைச் செய்ய வேண்டியிருக்கும்.

இந்தக் காலகட்டத்தில் ஒரே ஒரு குறிப்பிட்ட விடயம் நிச்சயமற்ற சமூக – பொருளாதார நிலைமைகள் மற்றும் இதற்கு முன்னர் பல சவாலான சூழ்நிலைகளை எதிர்கொண்ட ஒரு துறை என்ற வகையில், இந்த சவாலுக்கும் மேலாக உயரும் என்று நாங்கள் நம்புகிறோம். – என்று அவர் நம்பிக்கையுடன் முடிக்கிறார்.

## காணாமல் போனோர் விவகாரம்;

# உண்மைத் தன்மையுடன் செயற்பட்டால் தீர்வுகிட்டும்

## பேராசிரியர் திஸ்ஸ விதாரண கருத்து

அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு காணாமல் போனோர் விடயத்தில் தீர்வு காண முடியாது. பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வுகள் இதுவரை காலமும் இரு தரப்பினராலும் அரசியல் தேவைக்காக மாத்திரம் பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது. காணாமல் போனோர் விவகாரத்தில் உண்மைத் தன்மையுடன் செயற்பட்டால் மாத்திரமே ஒரு தீர்வு காண முடியும் என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

யுத்த காலத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

யுத்தத்தில் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் உண்மையான தரவுகள் இதுவரையில் கிடைக்கப்பெறவில்லை. ஒவ்வொரு தரப்பினரும் மாறுபட்ட வகையில் தரவுகளை சமர்ப்பித்துள்ளனர்.

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கப் பெற வேண்டும். இதில் இன வேறுபாடுகள் பார்க்கக் கூடாது. 2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவு பெற்ற காலத்தில் இன்று வரை காணாமல் போனோர் தொடர்பில் பேசப்படுகிறதே தவிர உறுதியான தீர்வு எடுக்கப்படவில்லை.

அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த விடயத்துக்கு ஒரு போதும் தீர்வைப் பெற முடியாது. பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வுகளை இது வரை காலமும் இரு தரப்பினரும் தங்களின் அரசியல் தேவைக்காக மாத்திரம் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

யுத்த காலத்தில் புலம்பெயர்ந்துள்ளவர்களும் தங்களின் ஆள் அடையாளங்களை உறுதிப்படுத்துவதற்கு முன்வருவதில்லை. இவ்வாறான ஒரு சில விடயங்களும் காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தில் இழுபறி நிலையில் இருப்பதற்கு ஒரு காரணியாக உள்ளது.

காணாமலாக்கப்பட்டோரது உறவுகளுக்கு நியாயம் வழங்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. தமது உறவுகளுக்கு என்னாயிற்று என்பதை அறிந்து கொள்ளும் உரிமை நீதி கேட்டுப்போராடுபவர்களுக்கு உண்டு. ஆகவே காணாமல் போனோர் விடயத்தில் தீர்வு காண வேண்டுமாயின் அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து ஒரு கொள்கைக்கமைய செயற்பட வேண்டும். – என்றார்.



## இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 06 | கணிதம் | அலகு 14

### திரவ அளவீடுகள் - விடைகள்

பின்வரும் அட்டவணையை பூர்த்தி செய்க

| சந்தர்ப்பம் | அலகு |
|---|---|
| ஒரு நாளில் உமது தந்தையார் அருந்தும் நீரின் அளவு | l |
| தேக்கரண்டியில் ஒரு தடவை எடுக்கும் திரவத்தின் அளவு | ml |
| உமது வீட்டில் உள்ள நீர்த் தாங்கியின் நீரின் அளவு | l |
| உமது தாயார் சமையலின் போது ஒரு தடைவ விடப்படும் தேசிக்காய்சாறின் அளவு | ml |
| கோரானா தடுப்பூசி ஒருவருக்கு ஏற்ப்பட்ட மருந்தின் அளவு | ml |

பின்வரும் அட்டவணையை பூரணப்படுத்துக

| ml | l , ml | l |
|---|---|---|
| 2400ml | 2l 400ml | 2.4l |
| 4250ml | 4l 250ml | 4.25l |
| 6005ml | 6l 5ml | 6.005l |
| 6425ml | 6l 425ml | 6.425ml |
| 8050ml | 8l 50ml | 8.05l |
| 6525ml | 6l 525ml | 6.525l |
| 5005ml | 5l 5ml | 5.005l |
| 2125ml | 2l 125ml | 2.125l |
| 8250ml | 8l 250ml | 8.25l |
| 2505ml | 2l 505ml | 2.505l |

பின்வரும் திரவ அளவீடுகளை கூட்டுக
1) 665ml 2) 1060ml 3) 7l 298ml 4) 13l 130ml
5) 9l 200ml 6) 7l 250ml 7) 6l 655ml 8) 12l 670ml
9) 6l 105ml 10) 34l 400ml

பின்வரும் அளவீடுகளின் கழித்தல் கணிதச் செய்கை
1) 700ml 2) 375ml 3) 2l 773ml 4) 3l 300ml
5) 3l 550ml 6) 3l 750ml 7) 4l 950ml 8) 6l 500ml
9) 1l 475ml 10) 2l 350ml

வசன பிரசினத்தில் உள்ள திரவ அளவீடுகளில் கூட்டல் கணித செய்கை பிரசினங்களை தீர்த்தல்.
1) 8l 750ml 2) 61l 220ml 3) 26l 200ml

வசன பிரசினத்தில் உள்ள திரவ அளவீடுகளில் கழித்தல் கணிதச் செய்கை பிரசினங்களை தீர்த்தல்.
1) 14l 350ml 2) 7l 250ml 3) 49l 950ml

**ஆக்கம் : திரு. சற்குணராசா செந்தூரன்**
**கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியர்**
**யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்**
**யா/ தேசிய கல்வியியற் கல்லூரி**

**வழிகாட்டலும் ஆலோசனையும் : திருமதி சுதர்சினி விக்னமோகன்**
**விரிவுரையாளர்**
**யா/ தேசிய கல்வியியற் கல்லூரி**

## பல கோடி ரூபா ஹெரோயின் போதையுடன் 5 பேர் கைது

பல கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளுடன் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) அதிகாலை இலங்கையின் தென் பகுதி கடல் பகுதியில் வைத்து குறித்த 5 பேரும் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது 250 கிலோகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. குறித்த போதைப் பொருள் படகு ஒன்றின் மூலம் எடுத்து வரப்படுவதாக தேசிய புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கு அமையவே துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## சட்டவிதி மீறி காரில் பயணித்த பொலிஸ் அதிகாரி சிக்கினார்!

தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறும் வகையில் இரு நபர்களுடன் காரில் பயணித்த பொலிஸ் அதிகாரி ஒருவரை மாரவில பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

தும்மலசூரிய பொலிஸுடன் இணைந்து பணியாற்றும் பொலிஸ் அதிகாரியே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளபோது, மாரவிலவில் பிரதான வீதியில் பயணித்த கார் ஒன்றை வீதிச் சோதனையில் இருந்த பொலிஸார் சோதனைக்குட்படுத்தினர்.

காரில் இருந்த மூவரில் ஒருவர் காரிலிருந்து இறங்கிப் பொலிஸாருக்குப் பதிலளித்த நிலையில் ஏனைய இருவரும் காரை எடுத்துக்கொண்டு தப்பிச் சென்றனர். பொலிஸாருக்குப் பதிலளித்த நபர், தும்மலசூரிய பொலிஸுடன் இணைந்து சேவையாற்றிவரும் பொலிஸ் அதிகாரி என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இருப்பினும், தும்மலசூரியாவிலிருந்து மாரவில பகுதிக்கு அவர்கள் பயணித்தமைக்கான காரணத்தைக் கண்டறிய முடியவில்லை என்றும், இது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## மேலுமொரு தொகுதி ஸ்புட்னிக் - வி தடுப்பூசிகள் நேற்று நாட்டுக்கு வந்தன

ரஷ்யாவில் தயாரிக்கப்படும் 15 ஆயிரம் ஸ்புட்னிக் – வி தடுப்பூசிகள் நேற்று (செவ்வாய்க்கிழமை) நாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

இந்த தடுப்பூசிகள் கண்டி மாவட்டத்துக்கு வழங்கப்படவுள்ளன என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டில் இதுவரையில் ஒரு லட்சத்து 59 ஆயிரத்து 88 பேருக்கு ஸ்புட்னிக் – வி தடுப்பூசியின் முதல் டோஸ் செலுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில், இந்த தடுப்பூசிகள் இரண்டாவது டோஸாக செலுத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிவப்புத் தரவுகள் புத்தக புதிய பதிப்பு நிறைவடைவு

இலங்கையில் அழிந்து வரும் தறுவாயில் உள்ள விலங்கினங்கள் மற்றும் தாவரங்கள் தொடர்பான சிவப்பு தரவுகள் புத்தகத்தின் புதிய பதிப்பு தயாரிப்பு பணிகளை சுற்றுச் சூழல் அமைச்சகம் நிறைவு செய்துள்ளது.

இது ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் தொகுக்கப்படுகிறது.

இலங்கையில் இறுதியாக இப் புத்தகத் தொகுப்பு 2012 இல் வெளியிடப்பட்டது.

ஒரு வருடத்துக்கு முன்னர் அமைச்சர் மஹிந்த அமரவீர சுற்றுச்சூழல் அமைச்சராகப் பொறுப்பேற்றபோது, அமைச்சகத்தின் அதிகாரிகளுக்கு சிவப்பு தரவு புத்தகத்தை விரைவில் தொகுக்குமாறு அறிவுறுத்தினார்.

அவரது வழிகாட்டுதலின் கீழ், சுற்றுச் சூழல் அமைச்சகத்தின் பல்லுயிர் பிரிவு, சிவப்பு தரவு புத்தகத்தை நிறைவு செய்துள்ளது.

இந் நிலையில் புத்தகத்தின் புதிய பதிப்பு வெளியீட்டு விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

## அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் நாயகமாக நிவுன்ஹெல்ல திங்கள் நியமிக்கப்பட்டார்

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆவது பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய அத்தியாவசிய உணவு விநியோகத்துடன் சம்பந்தப்பட்ட அவசரகால விதிமுறைகள், கடந்த திங்கட்கிழமை நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

சாதாரண பொதுமக்களின் வாழ்க்கை நிலையை இயல்பு நிலையில் பேணுவதற்குத் தேவையான நெல், அரிசி, சீனி உள்ளிட்ட ஏனைய நுகர்வுப் பொருள்களை விநியோகிப்பதை ஒருங்கிணைப்புச் செய்வதற்காக, அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் நாயகமாக, மேஜர் ஜெனரல் எம்.டீ.எஸ்.பி.நிவுன் ஹெல்ல நியமிக்கப்பட்டுள்ளார்.

# கொரோனாவைப் பயன்படுத்தி அவசரகாலச் சட்டம் பிரகடனம்

## ஜனாதிபதியின் கைகளுக்குள் அதிகாரம்



நாடு தற்போது கொரோனாப் பெருந்தொற்றுக்குள் உள்ளாகி இருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அவசரகால நிலைமையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பிரகடனப்படுத்தியுள்ளார்.

இதையடுத்து அத்தியாவசிய சேவைகள் பற்றிய பல விதிமுறை களை பிரகடனப்படுத்தி நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரம் ஜனாதிபதியின் கைகளுக்கு வந்துள்ளது.


இந்த அவசரகாலச் சட்டப் பிரகடனம் ஒரு மாதத்துக்குள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அங்கீகரிக்கப்பட வேண்டும்.

அதன்படி அடுத்த வாரத்தில் நாடாளுமன்றம் கூடும்போது இந்த அவசரகாலச் சட்டப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு அங் கீகரிக்கப்படும் எனத் தெரிகின்றது.

தேவைப்படின் மாதத்துக்கு ஒரு தடவை இத்தகைய பிரேரணை மூலம் அவசரகால நிலைமை நீடிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

### தொற்று, சாவு எண்ணிக்கை உச்சம்

# ஊரடங்கு தளர்வு பற்றி இன்னும் முடிவில்லை!



இராணுவத் தளபதி

நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள ஊரடங்குச் சட்டத்தை செப்டெம்பர் 6ஆம் திகதி தளர்த்துவதா? அல்லது நீடிப்பதா? என்பது தொடர்பில் இன்னமும் நாம் தீர்மானிக்கவில்லை.

- இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா ஊடகங்களிடம் தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையும், கொரோனா மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்கின்ற நிலையில் ஊரடங்குச் சட்டத்தை தளர்த்துவது தொடர்பில் உடனே தீர்மானம் எடுக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

சுகாதாரப் பிரிவினருடன் இது தொடர்பில் இந்த வாரம் கலந்துரையாடப்படும் எனவும், அதன் பின்னரே இறுதி முடிவு எடுக்கப்படும் எனவும் இராணுவத் தளபதி மேலும் கூறினார்.

# கொரோனாவின் 4 அலைகளுக்கும் ராஜபக்ஷ அரசுதான் முழுப்பொறுப்பு

### சம்பிக்க எம்.பி. குற்றச்சாட்டு

நாட்டில் கொரோனா வைரஸ் தாக்கத்தின் நான்கு அலைகள் உருவாகுவதற்கு அரசின் பொறுப்பற்ற செயற்பாடுகளே பிரதான காரணம். எனவே, போலியான முறையில் நாட்டை மூடாமல், விஞ்ஞான பூர்வமான லொக்டவுணைச் செய்யுங்கள். இல்லையேல் நிலைமை மோசமாகும்.

- ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க எச்சரிக்கை விடுத்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

நாடு தற்போது எச்சரிக்கை மட்டத்திலேயே இருக்கின்றது. தொற்றாளர்களின் எண்ணிக்கையும் உச்சம் தொட்டுள்ளது. இந்நிலையில், விஞ்ஞானபூர்வமாக நாட்டை முடக்குமாறு துறைசார் நிபுணர்கள் உட்பட பல தரப்பினரும் வலியுறுத்தினர். ஆனால், நாடு முறையாக முடக்கப்படவில்லை. தமக்கு தேவையான இடங்களை அரசு திறந்தே வைத்துள்ளது. இவ்வாறு பகுதியளவு நாட்டை முடக்குவதால் உரிய பயன் கிட்டாது. தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் மரண எண்ணிக்கையை குறைக்க முடியாது.

நாட்டை முடக்கும் தீர்மானம் ஜூன் மாதமளவில் எடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இழுத்தடிப்புகள் செய்யப்பட்டு இறுதி நொடியிலேயே பெயருக்கு முடக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது. நாட்டை இவ்வாறு போலியான முறையில் முடக்குவதால் உரிய பயன் கிட்டாது. பொருளாதார பாதிப்புகள் மட்டுமே ஏற்படும் என்பதை ஆளுந்தரப்பினர் புரிந்துகொள்ள வேண்டும்.

அத்துடன், தமது இயலாமையாலும், முறையற்ற முகாமைத்துவத்தாலும் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு முடக்கவே காரணம் என்ற கருத்தை உருவாக்கும் முயற்சியிலும் இந்த அரசு ஈடுபட்டுள்ளது.

இந்தியா, ரஷ்யா ஆகிய நாடுகளில் தொற்று வேகமாக பரவி வருகின்றது. அங்கிருந்து சுற்றுலாப் பயணிகளை அழைத்துவந்து புதிய திரிவுகளை உருவாக்குவதற்கும் அரசு முற்படுகின்றது. எமது நாட்டு மக்களை ஆய்வுகூட எலிகளாக் குவதற்கான முயற்சியா இது?

நாம் ஆட்சியைக் கவிழ்க்க முற்படவில்லை. மாறாக சுகாதாரத்துறை நிபுணர்கள் உட்பட துறைசார் நிபுணர்களின் ஆலோசனையின் பிரகாரம் செயற்படுமாறே அரசைக்கோரி வருகின்றோம். ஆனால், அவர்கள் எதிரணியில் இருக்கும்போது போலிகளைப் பரப்பி, ஆட்சியைக் கவிழ்க்க முற்பட்டனர்.

டொலர் பிரச்சினையால் மீண்டும் கூப்படம், வரிசை யுகம் உருவாகும் அபாயமும் உள்ளது - என்றார்.

# தகனத்துக்கான செலவை பொறுப்பேற்ற இளைஞர்கள்


(வவுனியா நிருபர்)


வவுனியாவில் கொரோனாத் தொற்று காரணமாக மரணமடைபவர்களின் சடலங்களைத் தகனம் செய்வதற்கான செலவைத் தாம் வழங்குகிறோம் என ஊடகவியலாளர் ப.கார்த்தீபன் மற்றும் சேப்ரி கண் நிறுவன உரிமையாளர் ம.மயூரன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

கொரோனாத் தொற்று காரணமாக மரணிப்பவர்களின் சடலங்கள் வவுனியா நகர சபைக்குச் சொந்த மாக பூந்தோட்டத்தில் அமைந்துள்ள இலத்திரனியல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டு வருகின்றன. இதன் போது சடலம் ஒன்றுக்கு 7 ஆயிரம் ரூபா நகர சபையால் கட்டணமாக அறவிடப்படுகின்றது.

குறித்த இலத்திரனியல் மயானத்தில் தகனத்துக்கான இயந்திரத் திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்புக்காகவே குறித்த கட்டணம் அறவிடப்பட்டு வருகின்றது. இதன்காரணமாக சில குடும்பங்கள் கட்டணம் செலுத்த முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், வவுனியாவைச் சேர்ந்த ஊடகவியலாளர் ப.கார்த்தீபன் மற்றும் பிரபல வர்த்தகரும் சேப்ரிகண் நிறுவன உரிமையாளருமாகிய ம.மயூரன் ஆகியோர் தாமாக முன்வந்து குறித்த சடலங்களைத் தகனம் செய்வதற்குக் கட்டணம் செலுத்த முடியாதவர்கள் தொடர்புகொள்ளும் பட்சத்தில் நகர சபைக்குத் தம்மால் முழுப் பணத்தையும் செலுத்தித் தகனம் செய்வதற்கான நடவடிக்கையை முன்னெடுக்க உதவுவதாகத் தெரிவித்துள்ளனர்.





இந்நிலையில், கொரோனா சடலங்களைத் தகனம் செய்வதற்கு நகர சபைக்குப் பணம்கட்ட முடியாதவர்கள் 0778500294 அல்லது 0773525375 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்புகொள்வதன் மூலம் குறித்த உதவியினைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர்கள் மேலும் கூறியுள்ளனர். (100)

# 103 வயது மூதாட்டிக்கு கொரோனாத் தடுப்பூசி



இலங்கையில் 103 வயது மூதாட்டி ஒருவருக்கும் கொரோனாத் தடுப்பூசி ஏற் றப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான தடுப்பூசி ஏற்றும் திட்டம் இலங்கையில் துரித வேகத்தில் முன்னெ டுக்கப்பட்டு வருகின்றது. இதில் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு முன்னுரிமை - முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

தடுப்பூசி நிலையங்களுக்கு வரமுடியாத முதியவர்களுக்கு வீடுகளுக்கே சென்று தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் 103 வயதுடைய மூதாட்டி ஒருவருக்கும் நேற்று வீட்டுக்கே சென்று சுகாதாரத் தரப்பினரால் தடுப்பூசி வழங் கப்பட்டுள்ளது. பதுளை பகுதியிலுள்ள குறித்த மூதாட்டியின் வீட்டுக்குச் சென்று சுகாதார அதிகாரிகள் தடுப்பூசியைச் செலுத்தினர்.

## யாழில் 24 மணித்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 37 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன் வேலணையில் 7 பேரும், ஊர்காவற்றுறையில் 10 பேரும், காரைநகரில் 05 பேரும், நல்லூரில் 17 பேரும், சண்டிலிப்பாயில் 31 பேரும், உடுவிலில் 28 பேரும், தெல்லிப்பழையில் 35 பேரும், பருத்தித்துறையில் 13 பேரும், மருதங்கேணியில் 5 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 2020 மார்ச்சிலிருந்து நேற்று மாலை வரை 12 ஆயிரத்து 460 பேர் கொரோனா நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் ஆயிரத்து 161 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 739 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

## வவுனியாவில் தொற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொரோனாத் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் 299 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களை கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும் அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# டோசிலிசுமாப் மருந்துகள் இந்த வாரம் கிடைக்கும்

தற்போது வைத்தியசாலைகளில் பற்றாக்குறையாக இருக்கும் கொவிட் - 19 நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கப் பயன்படுத்தப்படும் டோசிலிசுமாப் மருந்தின் பங்குகள் இந்த வாரம் நாட்டுக்குகிடைக்கப்பெறும்எனத்தெரிவிக்கப் பட்டுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் ஔடதங்கள் தொடர்பான பேராசிரியர் விசேட வைத்திய நிபுணர் பிரியதர்ஷினி கலப்பதி இதனைத் தெரிவித்துள்ளார். கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய அவர் இதனைக் கூறிள்ளார்.

உலகம் முழுவதும் உள்ள தேவை காரணமாக இந்த மருந்துக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. உலக சுகாதார நிறுவனம் இந்த மருந்தை கொவிட் நோயாளிகளுக்கு இரண்டாவது மருந்தாகப் பரிந்துரைத்துள்ள நிலையில், அதன் அதிக பயன்பாடு காரணமாக பற்றாக்குறை உருவாகியுள்ளது.

இந்த மருந்து கொவிட் - 19 வழக்குகளுக்கு சிகிச்சையளிக்க தயாரிக்கப்படவில்லை, முடக்கு வாதம் நோயாளிகளுக்கு தயாரிக்கப்பட்டது எனவும் அவர் கூறியுள்ளார். மருந்து உற்பத்தியாளர்கள் முடக்குவாதம் நோயாளிகளின் தேவையைப் பூர்த்தி செய்யவே இந்த மருந்தைப் பயன்படுத்துகிறார்கள், கொவிட் - 19 நோய்த் தொற்றுகளுக்கு சிகிச்சை அளிக்கவில்லை.

உலகம் முழுவதிலுமிருந்து தேவைகளை பூர்த்தி செய்வதில் சிரமங்களை எதிர்கொள்வதாக நிறுவனம் தெரிவித்துள்ளது. எவ்வாறாயினும், அனைத்து கொவிட் - 19 நோயாளிகளுக்கும் இந்த மருந்து வழங்கப்படுவதில்லை என்றும் கூறினார்.

# சிரேஷ்ட ஊடகவியலாளர் சிவலிங்கம் காலமானார்!



ஊடகவியலாளரும், கவிஞருமான முத்து சிவன் என்றழைக்கப்படும் முத்தையா சிவலிங்கம் சுகவீனம் காரணமாக காலமானார்.

கொவிட் தொற்று காரணமாகக் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த அவர் கடந்த திங்கட்கிழமை தனது வீட்டுக்குச் சென்றிருந்தார்.

78 வயதான அவர் நவமணி பத்திரிகையின் பிரதம ஆசிரியராக பணியாற்றியுள்ளமையுடன், வீரகேசரி, உதயன் போன்ற பத்திரிகைகளிலும் பணியாற்றி எழுத்து துறையிலும் தனது பங்களிப்பைச் செலுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வடமாகாணத்தில் எரியூட்ட முடியாமல் தேங்கிக் கிடக்கும் கொவிட் சடலங்கள்

## வவுனியா நகரபிதா கௌதமன் அறிவிப்பு

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களை எரியூட்டும் ஒரேயொரு எரிவாயு மயானமாக காணப்பட்ட வவுனியா பூந்தோட்டம் மயானம் பழுதடைந்துள்ளமையால் சடலங்கள் எரியூட்டப்படாமல் தேங்கும் நிலை காணப்படுவதாக வவுனியா நகரசபை தலைவர் தேசபந்து இ. கௌதமன் தெரிவித்தார்.

வவுனியாவில் உள்ள எரிவாயு மயானம் பழுதடைந்துள்ளமை தொடர்பில் அவரிடம் கேட்டபோது இவ்வாறு தெரிவித்திருந்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் -

வட மாகாணத்தைப் பொறுத்தவரையில் கொரோனா மரணங்கள் அதிகரித்த நிலையில் உள்ளன. இந்நிலையில் வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்தில் மாத்திரமே எரிவாயு மயானங்கள் இயங்கி வருகின்றன.

இந்நிலையில் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களிலும் கொரோனாவால் உயிரிழப்போரின் உடல்கள் வவுனியா மயானத்திலேயே எரியூட்டப்பட்டு வருகின்றன.

தற்போதைய நிலையில் அதிகளவான மரணங்களால் எமது மயானம் 24 மணித்தியாலங்களும் இயங்கும் மயானமாக செயற்பட்டு வருகின்றது. இதனால் நாம் பாரிய சவால்களையும் சிரமங்களையும் எதிர்கொள்கின்றோம்.

எனினும் எமது மக்களுக்கான சேவையை செய்ய வேண்டும் என்ற நிர்ப்பந்தமும் உள்ளது. எனினும் அதிகளவான சடலங்களால் எமது மயானத்தின் தன்மை மற்றும் வினைத்திறன் குறைந்து செல்கின்றது.

திங்கட்கிழமை மாத்திரம் 11 சடலங்களை எரியூட்டியிருந்தோம். காலை 8 மணியில் இருந்து மறுநாள் அதிகாலை 4 மணிவரையும் சடலங்கள் எரிக்கப்பட்டன. இதற்கும் மேலதிகமாக நேரப்பற்றாக்குறையால் வவுனியா வைத்தியசாலையில் இன்னும் சடலங்கள் எரியூட்டப்படாமல் உள்ளன.

இந்த மயானம் நேற்றுக் காலை செயலிழந்துள்ளது. எனினும் இதனை மீள இயக்குவதற்கான முயற்சியை எடுத்து வருகின்றோம்.

அதனை பழுதுபார்க்கக் கூடியவர்கள் எவரும் வவுனியாவில் இன்மையால் கொழும்பில் இருந்தே வரவேண்டியுள்ளது. ஒருநாள் எமது மயானம் இயங்காது விடும் பட்சத்தில் சடலங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே போகின்றது.

எனவே அரசாங்கம் இவ்வாறான அனர்த்த நிலைமையில் தங்களால் செய்யக்கூடிய உதவிகளை உடன் செய்யுமாறு வேண்டுகின்றோம் எனத் தெரிவித்தார்.

# மனைவிக்கு கொரோனாத் தொற்று நாட்டை விட்டுச் சென்ற கணவன்

கர்ப்பிணி மனைவிக்கு கொவிட் - 19 தொற்று ஏற்பட்டதால் வீட்டு தனிமைப்படுத்தலில் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்ட ஒருவர் தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறி நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

கேகாலை சுகாதார சேவைகள் திணைக்களத்தால் இவ்வாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருந்த நிலையில், குறித்த நபர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல மாதங்களுக்கு முன்பு குறித்த நபர் நாடு திரும்பியிருந்த நிலையில் டுபாயில் கடமையாற்ற வேண்டியிருந்ததால் அவர் நாட்டை விட்டு வெளியேற நேர்ந்ததாக அவரது குடும்ப உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

அவரது மனைவிக்கு ஓகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி கொவிட் - 19 தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்ட நிலையில், வீட்டில் வசிப்பவர்கள் செப்டெம்பர் முதலாம் திகதி வரை வீட்டை விட்டு வெளியேற வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும், கணவர் ஓகஸ்ட் 28 ஆம் திகதி அதிகாலையில் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார் என அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



20

**வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவத்தையொட்டி 'காலைக்கதிர்' நடாத்தும்**

# மாபெரும் சைவ சமய அறிவுப் போட்டி - 2021

## போட்டி விதிகள்

1. இந்தப் போட்டியில் ஆர்வமுடைய அனைவரும் பங்குபற்ற முடியும்.
2. 13.08.2021 முதல் எதிர்வரும் 06.09.2021 வரை காலைக்கதிரில் தினமும் வெளியாகும் கேள்விகளுக்குச் சரியான விடைகளை இதே தாளில் எழுதி, கூப்பனிலுள்ள விவரங்களை நிரப்பி அனுப்புவதன் மூலம் போட்டியினுள் நுழையலாம்.
3. சரியான விடைகளை எழுதி அனுப்புவர்களில் இருந்து தினமும் குலுக்கல் முறை மூலம் அந்த நாளுக்குரிய வெற்றியாளர் தெரிவு செய்யப்படுவார். அத்துடன் முழு நாள்களிலும் சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று பேருக்கும் பணப் பரிசில்கள் உண்டு

## பரிசு விவரம் :

**முழுப் போட்டிக்குமான முதலாம் இடம் - ரூபா 7,000.00**
**இரண்டாம் இடம் - ரூபா 5,000.00**
**மூன்றாம் இடம் - ரூபா 3,000.00**
**தினசரி வெற்றியாளர்கள் ஒவ்வொருவருக்கும் தலா - ரூபா 1,000.00**

4. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்பலாம்.
5. பரிசுக்குரியவர்கள் எதிர்வரும் 12.09.2021 அன்று காலைக்கதிர் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படுவார்கள்.
6. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

**1. சந்நிதியான் ஆச்சிரமத்தினால் வெளியிடப்படும் பருவ கால ஆன்மீக சஞ்சிகையின் பெயர் என்ன?**

........................................................................

**2. ஈழத்து சிவாலயங்களில் பாடல் பெற்ற திருத்தலங்கள் எவை?**

........................................................................

**3. குமாரதந்திரம் என்றால் என்ன?**

........................................................................

**4. பஞ்சம் படை வந்தாலும், பாரெல்லாம் வெந்தாலும் அஞ்சுவமோ நாங்களடி கிளியே, நல்லூரான் தஞ்சமடி..... என்று பாடியவர் யார்?**

........................................................................

**5. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் தீர்த்தத் திருவிழாவின் திதி என்ன?**

........................................................................

**சரியான பதில்கள், கூப்பன்களுடன் இணைக்கப்பட்டு தபால் மூலமாகவோ, நேரடியாகவோ கிடைக்கக் கூடியவாறு எதிர்வரும் 10.09.2021 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.**

**காலைக்கதிர் - பசுமை ஊடக இல்லம்**
**30, கல்லூரி வீதி,**
**யாழ்ப்பாணம்**

20

பங்குபற்றுபவர்களின் விவரங்கள்:-

1. முழுப் பெயர் : ----------------------------------------
2. பிறந்த திகதி : ----------------------------------------
3. கல்வி கற்கும் தரம் : ----------------------------------------
4. பாடசாலை : ----------------------------------------
5. முகவரி : ----------------------------------------

..............................................
கையொப்பம்

காலைக்கதிர் Kalaikkathir

# சர்வதேசத்தை ஏமாற்றும் வகையில் அரசின் செயற்பாடுகள் உள்ளன

## கலையரசன் எம்.பி. காட்டம்




கடந்த காலங்களிலே தமிழ் மக்களை ஏமாற்றிய விடயங்களை தற்போது ஐ.நா. சபை அறிந்துள்ளது. எனவே எதிர்காலத்தில் ஐ.நா. சபை அல்லது வெளிநாட்டுத் தலையீட்டினூடாகத் தான் இந்த நாட்டில் நிலையான தீர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான கடந்த திங்கட்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஓகஸ்ட் 30 ஆம் திகதி உலகளாவிய ரீதியில் காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இலங்கை நாட்டைப் பொறுத்தவரையில் நீண்ட காலமாகத் தமிழ் மக்கள் மத்தியிலே இருக்கின்ற பாரிய பிரச்சினையாக இது இருக்கின்றது.

இதே அரசாங்கத்தால் 2009 ஆம் ஆண்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகள் தொடர்பில் இற்றை வரைக்குமாக எந்தவிதமான முன்னேற்றகரமான செயற்பாடுகளையும் இந்த அரசாங்கம் முன்னெடுக்கவில்லை.

இலங்கையில் வாழ்கின்ற தமிழர்களை நாடு சுதந்திரம் அடைந்த கையோடு எவ்வாறு ஏமாற்றி வந்தார்களோ அதே பாணியில் இன்று சர்வதேசத்தையும் ஏமாற்றக் கூடிய வகையிலே அவர்களது செயற்பாடுகள் இருக்கின்றன.

ஏனெனில் ஐ.நா. சபையிலே இந்த நாட்டிலே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று கூறப்பட்ட பல விடயங்கள் கூட முன்னெடுக்கப்படவில்லை. தமிழ் மக்கள் சார்ந்த விடயங்கள் கூட இதய சுத்தியுடன் இந்த அரசாங்கம் நிறைவேற்றவில்லை என்பது தான் உண்மையான வெளிப்பாடு.

எமது நாட்டைப் பொறுத்தவரையில் காணாமல் ஆக்கப்பட்டோர் சம்பந்தமாக நீண்ட காலமாக அவர்களின் உறவுகளின் அமைப்பு முன்னெடுத்து வருகின்றது. ஆனால் அதிலே முன்னேற்றகரமான செயற்பாடுகள் எதுவும் நடைபெறவில்லை.

எதிர்வருகின்ற மாதங்களில் ஐ.நா.சபை கூட இருக்கின்றது. அதற்கு முன்னதாக ஏதாவது சில பணிகளை தாங்கள் முன்னெடுத்திருக்கின்றோம் என்று ஐ.நா. சபையில் காண்பிப்பதற்காகவே வடக்கில் காரியாலயமொன்றை உருவாக்கியிருக்கின்றார்கள். இது வெறுமனே கண்துடைப்பான ஒரு விடயமாகும்.

ஏனெனில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் இந்த நாட்டின் அமைச்சர்கள் கூட அவர்கள் காணாமல் ஆக்கப்படவில்லை வெளிநாடுகளில் வசிக்கின்றார்கள் போன்ற பொறுப்பற்ற விதமான கருத்துக்களை வெளியிட்டிருந்தார்கள். இந்த அரசாங்கம் எங்கள் மீது அக்கறையற்ற ஒரு சிந்தனையில் தொடர்ச்சியாக எங்களைப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். இது உண்மையிலேயே ஏற்றுக் கொள்ளக்கூடிய விடயமல்ல.

எனவே மேற்கூறிய கருத்துக்களின் அடிப்படையிலும் நீண்டகாலமாகத் தமிழ் மக்கள் இந்த நாட்டில் அனுபவிக்கின்ற துன்ப, துயரங்களின் அடிப்படையிலும் எங்களுக்கு ஒரு நிலையான அரசியற் தீர்வு கிடைக்க வேண்டியது இந்த காலத்தின் கடப்பாடாக இருந்து வருகின்றது. தற்போதைய நிலையில் தமிழ் மக்களாகிய நாங்கள் ஒன்றுபட்ட சக்தியாகத் திகழ்ந்து எமது மக்களின் நீண்டகாலப் பிரச்சினைக்கு நிலையான தீர்வைப் பெறுகின்ற வழியிலே பயணிக்க வேண்டிய கடப்பாடு இருக்கின்றது.

அந்த அடிப்படையில் நாங்கள் செயற்பட வேண்டும். கட்சி ரீதியாகவும் நாங்கள் அவ்வாறான செயற்பாடுகளையே முன்னெடுத்து வருகின்றோம். எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நீண்டகாலமாக ஐ.நா. சபையில் தமிழ் மக்கள் சார்ந்த பல விடயங்களை முன்னெடுத்து தற்போது ஏதோவொரு வகையில் அந்த விடயங்கள் கையாளப்பட்டு முன்னேற்றகரமான செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த காலங்களிலே தமிழ் மக்களை ஏமாற்றிய விடயங்களை தற்போது ஐ.நா. சபை அறிந்துள்ளது. எனவே எதிர்காலத்தில் ஐ.நா. சபை அல்லது வெளிநாட்டுத் தலையீட்டினூடாகத் தான் இந்த நாட்டில் நிலையான தீர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். எமது காணாமல் ஆக்கப்பட்டோருக்கான உரிய தீர்வை பெறுவதற்காக எமது விடயங்களைக் கையாளும் புலம்பெயர் அமைப்புகளும் அக்கறையுடன் செயற்படுகின்றன.

அந்த அடிப்படைகளில் தான் ஒரு தீர்வு நிறைவேற்றப்பட வேண்டும். அவ்வாறானதொரு நிலையான தீர்வு எமது மக்களுக்குக் கிடைக்கவில்லை என்ற ஒரு நிலைமை இருக்குமானால் இந்த நாட்டிலே தமிழர்கள் வாழ்ந்ததற்கான எந்தவோர் அடையாளங்களும் இல்லாத ஒரு நிலைமையே ஏற்படும்.

ஏனெனில் தற்போதைய அரசாங்கம் ஆட்சியேற்றதில் இருந்து வடக்கு கிழக்கிலே அவர்கள் கையாளுகின்ற விடயங்கள் ஒவ்வொன்றும் தமிழர்களின் இருப்பைக் கேள்விக்குறியாக்குகின்றனவாகவே அமைகின்றன. கடந்த காலங்களில் ஏற்படுத்தப்பட்ட விடயங்களுக்குரிய தீர்வு இல்லாமல் புதிய புதிய விடயங்களை முன்னெடுத்து எம்மைப் பலவீனப்படுத்துகின்ற அல்லது எமது பிரதேசங்களிலிருந்து வெளியேற்றக் கூடிய வகையிலே கடந்த காலங்களில் ஆயுத ரீதியான அடக்குமுறையைச் செய்தவர்கள் தற்போது நிர்வாக ரீதியான அடக்குமுறையைச் செய்கின்றார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயங்களை அரசோடு இணைந்து பயணிக்கின்ற அரசியல்வாதிகள் அறிந்து இந்த மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற அடிப்படையில் செயற்பட வேண்டும். தங்கள் சுயநலத்துக்காக தற்போது அரசுடன் இணைந்து பயணித்தாலும் தாங்கள் தாமாகவே உணர்ந்து அரசில் இருந்து ஒதுங்கி எமது தமிழ் மக்களின் இருப்புகளைப் பாதுகாக்கின்ற விடயத்தில் எம்முடன் இணைந்து பயணிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

## பாணந்துறையிலும் சடலங்கள் மாறுபாடு

பாணந்துறை போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த இரண்டு சடலங்கள் மாறுபட்டுள்ளன.

குறித்த வைத்தியசாலையின் விடுதி எண் 7 இல் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்த 89 மற்றும் 93 வயதுடைய இரண்டு பெண்களின் உடல்கள் ஒருவருக்கொருவர் மாற்றப்பட்டுள்ளன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களின் மொரட்டுவ, பகுதியைச் சேர்ந்த 89 வயது முஸ்லிம் பெண் கடந்த மாதம் 21 ஆம் திகதி உயிரிழந்தார். அவரது உடல் 26 ஆம் திகதி பாணந்துறை வீரசிங்க மாவத்தையில் அவரது உறவினர் களிடம் ஒப்படைக்கப்பட்டது.

எனினும், அவரது சடலத்துக்குப் பதிலாக பாணந்துறை பகுதியைச் சேர்ந்த 93 வயதுடைய பெண்ணின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு குறித்த சடலம் மட்டக்களப்பு ஓட்டமாவடியில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், 93 வயதான பெண்ணின் மகள் கடந்த திங்கட்கிழமை தனது தாயின் இறுதிச் சடங்குகளைச் செய்வதற்காக பொது சுகாதார ஆய்வாளருடன் வைத்தியசாலைக்கு சென்றிருந்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் குறித்த சடலம் அங்கிருக்கவில்லை என்பது தெரியவந்துள்ளது. இதையடுத்து குறித்த பகுதியில் சற்று பதற்றமான நிலை ஏற்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தை மூடிமறைக்க வைத்தியசாலை அதிகாரிகள் ஒருங்கிணைந்த முயற்சி மேற்கொண்டனர் எனவும், அந்தப் பெண் தனது தாயின் உடலை கோரி உறுதியான நிலைப்பாட்டை எடுத்தார் எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும், பல்வேறு தரப்பினரின் தலையீட்டிற்குப் பிறகு, வைத்தியசாலை மட்டத்தில் விசாரணை நடத்த முடிவு செய்யப்பட்டதில் பிரச்சினை தீர்க்கப்பட்டதாக கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## 2 ஆயிரம் ரூபா கிடைக்காதோர் மேன்முறையீடு செய்ய முடியும்!

2 ஆயிரம் ரூபா கொடுப்பனவை பெறுவதற்குத் தகுதி பெற்றிருந்தும் இதுவரையில் மேற்படி கொடுப்பனவு கிடைக்கப்பெறாதவர்கள் பிரதேச செயலகத்துக்கு மேன்முறையீடு செய்யமுடியும் என உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, தாம் குடியிருக்கும் கிராம உத்தியோகத்தர் ஊடாக குறித்த மேன்முறையீட்டை முன்வைக்க முடியும் என அந்த அமைச்சின் செயலாளர் என்.எச்.எம்.சித்ரானந்த தெரிவித்துள்ளார். எவ்வாறிருப்பினும் நிவாரணக் கொடுப்பனவைப் பெறத் தகுதிபெற்றவர்களில் சுமார் 50 வீதமானோருக்கு 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்பு

முல்லைத்தீவு - மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். 36 அகவையுடைய குளியாப்பிட்டிய பகுதியைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவரது உடலம் கிளிநொச்சி மாவட்டவைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## ஊரடங்கைமீறி வியாபாரத்தில் ஈடுபட்ட ஆறு பேர் கைதாகினர்

மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டத்தை மீறி சட்டவிரோதமான முறையில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஆறு நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனக் காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறி தெரிவித்துள்ளார்.

அத்துடன் குறித்த வியாபார நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்பட்ட ஆறு சிறிய லொறிகளுடன், ஓட்டோ ஒன்றையும் கைப்பற்றியுள்ளோம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கல்லடி, நாவற்குடா மற்றும் ஆரையம்பதி பிரதான வீதிகளில் கொவிட் - 19 பரவும் அளவிற்குச் சட்டவிரோதமான முறையில் மரக்கறி மற்றும் பல்வேறு உணவுப் பொருள்களை விற்பனை செய்தவர்களே இவ்வாறு வாகனங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பலமுறை ஒலிபெருக்கி மூலம் இதனைத் தடை செய்தும் அதனை மீறிச் செயற்பட்டவர்களே கைதாகினர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## தனிமைப்படுத்தல் மீறல் 498 பேர் கைதாகினர்

சுகாதார அமைச்சால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரப் பகுதியில் மொத்தம் 498 நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அத்துடன் இதன்போது 42 வாகனங்களும் தடுப்புக் காவலில் எடுக்கப்பட்டன.

குறித்த குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்ரோபர் 30 முதல் இதுவரையான காலப் பகுதியில் மொத்தம் 62 ஆயிரத்து 85 நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதனிடையே திங்கட்கிழமை மேல் மாகாணத்துக்குள் உள் நுழைய முயன்ற 489 வாகனங்களில் பயணித்த 1,153 நபர்களும், வெளியேற முயன்ற 316 வாகனங்களில் பயணித்த 639 நபர்களையும் பொலிஸார் சோதனையிட்டுள்ளனர்.

மாகாணங்களுக்கு இடையேயான பயணத் தடை அமுல்படுத்தப்பட்டதிலிருந்து, வாகனங்களை ஆய்வுசெய்ய மேற்கு மாகாணத்தின் 13 நுழைவு மற்றும் வெளியேறும் இடங்களில் வீதித் தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 3 01.09.2021 இல் வெளியிடப்பெற்றது.